மலர் - 26 / இதழ் -09/செப்டம்பர் 2025
Volume -26/Issue - 09/September 2025
தமிழ் மாத இதழ்/தனிப்பிரதி ரூ.20/-
Tamil Monthly/Per Copy Rs.20/-

வளரும் விண்ணரசு
VALARUM VINNARASU

# இயேசுவுக்காக



# தீவிரம் தேவை

# பொதுச்சேவகரிடமிருந்து...



செயற்குழு உறுப்பினர்களுடன் பொதுச்சேவகர்- துணைப்பொதுச்சேவகர்



பொதுக்குழு உறுப்பினர்கள்



பெரியகுளம் சிஎஸ்ஐ சபை ஆயருடன்

கிறிஸ்துவுக்குள் அன்பான வளரும் விண்ணரசு வாசக சகோதர, சகோதரிகளுக்கு, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் பொதுக்குழுக் கூட்டம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது.



சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர். பால் வில்சன் அவர்கள் தேவசெய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

எனது பொறுப்புக் காலம் முடிந்தவுடன், 01.04.2026 முதல், புதிய பொதுச்சேவகராக திரு. டேவிட் சாலமோன் அவர்கள் பொறுப்பேற்பார். தேவ மனுஷனாகிய அவருக்கு, இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானத்தைத் தேவன் தந்து தொடர்ந்து வழி நடத்திட, அவருக்காக ஜெபிக்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

ஆகஸ்ட் 17ஆம் தேதியன்று பெரியகுளம் தென்கரை CSI ஆலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் ICGM ஊழியங்களை அறிமுகப்படுத்தி தேவசெய்தி அளித்தேன்; அவ்வேளையில் திரு. கிறிஸ்டோபர் அண்ணன் அவர்கள், சமீபத்தில், தான் மேற்கொண்ட சத்தீஸ்கர் பணித்தளச் சந்திப்பு குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள்.

ஆராதனையில் ஊழியத்தை அறிமுகப்படுத்தி, தேவசெய்தியளிக்க வாய்ப்புத் தந்த சபையின் போதகர் அருள்திரு. ஈசாக்கு அவர்களுக்கும், அண்ணன் கிறிஸ்டோபர் அவர்களுக்கும் இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல்வியாண்டு முதல், நமது சத்தீஸ்கர் மாணவர் விடுதியில் பெண் குழந்தைகளும் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்சமயம் 30 பெண் பிள்ளைகள், பெண்கள் விடுதியில் இருக்கிறார்கள்.

தொடர்ச்சி கடைசிப் பக்கம் பார்க்க...

நிறுவனர்
டாக்டர். N.J. ஞானையா

ஆசிரியர் குழு:

அருள்திரு. G. பொன்னுராஜ்
அருள்திரு. இம்மானுவேல் பாண்டி
திரு. இரா. பாலசுப்பிரமணியன்
திரு. V.S. தம்பிராஜ்
திருமதி. ரேணுகா பிரின்ஸ்


இதழின் உள்ளே...


| | |
|---|---|
| அருட்செய்தி! | 04 |
| கனவு காண வா! | 08 |
| ஆகஸ்ட் மாத வினா-விடைகள் | 10 |
| துதித்து மன்றாடுவோம்! | 11 |
| மறக்கமுடியாத அருட்தொண்டர்கள் | 21 |
| பெண்கள் பகுதி | 29 |
| வேதாகமத்தின் பக்கங்களிலே | 31 |
| வாலிபர் பகுதி | 34 |
| சரியான விடை எழுதியவர்கள் | 36 |
| வேத வினாக்கள் | 37 |
| நடப்புச் செய்திகள் | 38 |



| | ஆண்டு சந்தா | ஆயுள் சந்தா |
|---|---|---|
| இந்தியா : | ₹200/- | ₹1500/- |


**சந்திக்கப்படாத மக்கள் கூட்டங்களை சந்தித்து சீடராக்கும் ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி**


**ICGM**

**58/1 முத்தாலம்மன் கோயில் தெரு, சேலையூர், சென்னை- 600 073.**

வளரும் விண்ணரசு குறித்த விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள அலைபேசி : 9003916480
ICGM Land Line: (044)2229 1045

contacticgm@gmail.com


# இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன்

**தரிசனம்:** (Vision Statement)

நமது இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களில் வாழும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் சாட்சியுள்ள சுயசார்புள்ள திருச்சபைகள்.

**வேத ஆதாரம்:** (வெளி. 7:9)

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக் குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்."

**செயல்திட்டம்:** (Mission Statement)

இயேசு கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம், இந்தியாவில் நற்செய்தி சென்றடையாத, தேவன் வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, நற்செய்தியைப் பிரசங்கித்து, அவர்களை சீடர்களாக்கி, சாட்சியுள்ள சுயசார்பு திருச்சபைகளை உருவாக்குகின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

**வேத ஆதாரம்:** (மத்தேயு 28:19-20)

"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்."


வளரும் விண்ணரசு பத்திரிகைக்கு செக், டிராப்ட் ஆன்லைன் மூலம் பணம் அனுப்புபவர்கள் கீழ்க்கண்ட வங்கிக்கணக்குக்கு அனுப்பி 94 42 15 04 82 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பவும்.
A/C NAME: IRAI ARASU TRUST, BANK NAME: STATE BANK OF INDIA
A/C NUMBER: 10143136762, IFSC CODE: SBIN0002235

அருட்செய்தி

# இயேசுவுக்காக தீவிரம் தேவை !

டாக்டர்.N.J. **ஞானையா**

உலக வரலாற்றில் நாட்டுக்காக உயிரையே தியாகம் செய்யத் துணிந்த தீவிரவாதிகள் உண்டு. இத்தாலி நாட்டின் கரிபால்டியையும், ஸ்காட்லாந்து நாட்டின் வில்லியம் வாலசையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். மொழிக்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் உண்டு. இந்தித் திணிப்பை எதிர்த்து (தமிழ் வாழ) தீக்குளித்த பல்கலைக்கழக மாணவர் ராஜேந்திரனை மறக்கமுடியாது. மத தீவிரவாதிகள் மலிந்து வரும் காலம் இது. ஜீகாட் குழுவினர், ஐசிஸ் குழுவினர், தாலிபான் குழுவினர் எல்லாம் இஸ்லாமியத் தீவிர வாதக் குழுவினர்.

திருச்சபை வரலாற்றிலும் மார்டின் லூத்தர், ஜான் கால்வின், உல்ரிச் சுவிங்லி, வில்லியம் டின்டேல், ஜான் நாக்ஸ் போன்றோர் தங்கள் நாட்களில் தீவிரமாக இருந்தனர். இந்திய அருட்பணியியக்க வரலாற்றில் பர்த்தலமேயு சீகன்பால்க், வில்லியம் கேரி, ராபட்டோ டி நொபிலி, பிஷப் கால்டுவெல், ரிங்கிள் தோபே, ரேனியஸ், பிஷப் வாஸ்கம் பிக்கெட், மெக்காவரன், பிஷப் அசரியா போன்றோர் மிகத்தீவிரமாகப் பணிசெய்தனர்.

**ஜெபத்தில் தீவிரம்**

கிருஸ்தவ வாழ்விற்கும், ஊழியத்திற்கும் அடிப்படை ஜெபம். இடைவிடாமல், ஆபத்து நெருங்கியபோதும் ஜெபத்தில் தீவிரமாக இருந்தவர் தானியேல். கீழ்க்கண்ட வசனம் அதை உறுதிப்படுத்தும்:

"தானியேலோவென்றால் அந்தப் பத்திரத்திற்குக் கையெழுத்து வைக்கப் பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்றுவேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" (தானியேல் 6:10).

சிங்கக்கெபியில் ஜெபிக்கும்தானியேல்



அவருடைய ஜெப வாழ்வு அவரை சிங்கக்குகைக்கு அனுப்பியது. ஆனால் அந்த நாட்டின் அரசராயிருந்த தரியு, " நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத்தப்புவிப்பாராக" (தானியேல் 6:16) என்று கூறினார். அடுத்த நாள் அதிகாலையில் அந்த சிங்கக்குகையின் வாயிலில் நின்று, " தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா ?" (தானியேல் 6:20) என்று கேட்டார்.

ஆம். இடைவிடாமல் தானியேல் ஆராதித்த (ஜெபித்த) அந்த தேவன் அவரைச்

சிங்கங்களின் வாயிலிருந்து காப்பாற்றினார். நாம் ஜெபத்தில் தீவிரமாகும்போது சிங்கக்குகை போன்ற துன்பங்கள் வரலாம். ஆனால் தேவன் நம்மைக் கைவிடமாட்டார்.



கொள்கையில் தீவிரமான
சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ

பவுல் அப்போஸ்தலன், "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:17) என்று எழுதினார். அவரும் அந்த ஜெபவாழ்க்கையில் வாழ்ந்தார். நற்செய்தியை அவருடைய காலத்திலே தீவிரமாய் அறிவித்து, சபைகளை உருவாக்கினார். அவருடைய ஊழியத்தில் அடிப்படையாக இருந்தது ஜெபமே.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளி நாடுகளிலிருந்து பல மிஷனரிகள் இந்தியா வந்தனர். அவர்களில் ஒருவர் ஜான் நெல்சன் ஹைட். அமெரிக்க நாட்டிலிருந்து பஞ்சாப் மாநிலத்திற்குத் தனது 27 ஆவது வயதில் வந்தார். பெரிய பேச்சாளர் அல்ல; காதும் சரியாகக் கேட்கவில்லை; மொழி படிப்பதும் கடினமான காரியமாய் இருந்தது. ஆனால் கர்த்தர் அவருக்கு ஜெபிக்கும் ஊழியத்தைக் கொடுத்தார். இரவெல்லாம் தூங்காமல் ஜெபிப்பாராம். "ஜெபிக்கும் அப்போஸ்தலன்" என்றும், "ஜெபிக்கும் ஹைட்" என்றும் மக்களால் அழைக்கப்பட்ட அவர், 18 ஆண்டுகள் இந்தியாவின் எழுப்புதலுக்காகவும், பஞ்சாபில் மக்கள் மனந்திரும்பவும் ஜெபித்தார். நூற்றுக்கணக்கான மக்கள் ஆண்டவரிடம் வந்தனர்.



ஜெபவீரன்
திரு. ஜான் நெல்சன் ஹைட்

ஆன்ட்ரூ முர்ரே, ஜார்ஜ் முல்லர், சார்லஸ் பின்னி, ஹட்சன் டெய்லர், ரீஸ் ஹவல்ஸ், இவான் ராபர்ட் போன்ற ஜெபவீரர்களின் வரலாறுகளும் நமக்கு அறைகூவல் கொடுப்பவை.

**கொள்கையில் தீவிரம்**

வேதபுத்தகத்தில் தானியேலுடன் சென்ற மூன்று இளைஞர்களான சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பற்றிய குறிப்பை தானியேல் 3: 8-29 இல் வாசிக்கிறோம். அதில் எனக்கு அறைகூவல் விடுத்த வசனங்களைக் கீழே எழுதுகிறேன்.

"நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் விடுவிக்காமல் போனாலும் நாங்கள் பொற்சிலையைப் பணிய மாட்டோம் (3:17-18). அதுதான் கொள்கையில் தீவிரம்!

சிறுவனான தாவீது, மாபெரும் கோலியாத்தை எதிர்த்துச் செல்லுகையில் கூறிய கீழ்க்கண்ட சொற்கள் அவருக்குக்

கர்த்தர் பேரில் இருந்த கொள்கைப் பிடிப்பைக் காட்டுகின்றன.

நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். ....... யுத்தம் கர்த்தருடையது ! (1 சாமுவேல் 17:45-47).


வெற்றி பெற்ற தாவீது

அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்த அருட்பணியாளர்களின் மகனான டானல்ட் மெக்காவரன் இந்தியாவில் பிறந்தவர்-இந்தியாவில் சுமார் 40 ஆண்டுகள் அருட்பணி செய்தவர். இயேசுவின் கடைசிக் கட்டளையைத் தன் வாழ்நாள் கொள்கையாக மாற்றியவர். உலகெங்கும் உள்ள சபைகளுக்கும், அருட்பணி இயக்கங்களுக்கும், இறையியல் கல்லூரிகளுக்கும் மத்தேயு 28:16-20 ஐப் பற்றிக்கூறி, எழுதி அறைகூவல் விடுத்தவர். திருச்சபை வளர்ச்சி இயக்கம் என்னும் மாபெரும் ஒன்றைத் தொடங்கியவர்.

தன் கொள்கைக்காக 90 வயது வரை அயராது உழைத்தவர். அவருடைய அடிச்சுவடுகளில் வந்த ரால்ப் வின்டர் என்பவர், "சந்திக்கப்படாத மக்கள் இனங்களை" (Unreached People Groups) சந்திக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியவர். அப்போஸ்தலர் 1:8 ஆம் வசனத்திற்குப் புதியதோர் விளக்கத்தைக் கொடுத்து,

திரு. ரால்ஃப் வின்டர்


நற்செய்திப்பணி ஒன்று
நற்செய்திப்பணி இரண்டு
நற்செய்திப்பணி மூன்று
(E-1 Evangelism One;
E-2 Evangelism Two and
E-3 Evangelism Three) என்று அழகாக ஆணித்தரமான அறைகூவல் கொடுத்தவர். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அருட்பணியியல் கொள்கைகளைப் பரப்பிய தலைவர்களில் அவர்கள் இருவரும் இடம்பெறுகின்றனர். இந்தியாவிலேயே அருட்பணி இயக்கங்கள் தொடங்கப்படவேண்டும் என்ற கொள்கையில் IMS – Indian Missionary Society, NMS – National Missionary Society என்னும் இரு இயக்கங்களைத் தொடங்கிய பிஷப் அசரியாவின் உறுதியான கொள்கைப்பிடிப்பையும், China Inland Mission என்னும் இயக்கத்தைத் தொடங்கிச் சுமார் 1000 அருட்பணியாளர்களைச் சீனாவுக்கு அனுப்பிய ஹட்சன் டெய்லரின் கொள்கைப்பிடிப்பையும் நாம் மறக்க முடியாது.

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரிந்தியர் 9:16) என்ற பவுலடியாரின் உறுதியான கொள்கையைப் பின்பற்றிய அற்புதமான அருட்பணியாளர்களின் வாழ்வு நமக்கு இன்றும் அறைகூவல் கொடுக்கிறது. இத்தகைய முறையில் நாம் தீவிரமாவோமா?

**செயலில் தீவிரம்**




வேதத்தில் வரும் வரலாறுகளில் என்னைக் கவர்ந்த சிலவற்றில் ஒன்று எஸ்தரின் வரலாறு. தன்னை வளர்த்த மொர்தேகாயின் அறைகூவலைப் பெற்ற அரசியான அந்த எஸ்தரின் மொழிகள் இவை: "நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன்" (எஸ்தர் 4:16).

பல ஆண்டுகளுக்கு முன் நமது வளரும் விண்ணரசில் வந்த ஒரு கட்டுரையில் எஸ்தர் தன் காலத்தின் அறைகூவலையும், தன் கடமையின் அறைகூவலையும், காரியத்தின் அறைகூவலையும் ஏற்று எப்படி ஜெபத்துடன் (உபவாசத்துடன்) செயல்பட்டாள் என்று எழுதப்பட்டிருந்தது. "இது சிந்திக்கும் காலம் – செயல்படும் நேரம்" என்னும் பாடல் பிறந்ததும் எஸ்தரின் வாழ்வைப் படித்தபின்னரே.

**ஏமி கார்மைக்கேல் அம்மையார்**



அனலுமின்றி, குளிருமின்றி வெதுவெதுப்பாயிருக்கும் வாழ்வை (வெளி 3:15-16) ஆண்டவர் விரும்புவதில்லை; வெறுக்கிறார். தன்னுடைய காலத்தில் தவறான வாழ்க்கைக்குத் தள்ளப்பட்ட இளம்பெண்களைக் காப்பாற்ற அயர்லாந்து நாட்டிலிருந்து தமிழகம் வந்த அருட்பணியாளர் ஏமி கார்மைக்கேலின் தீவிர செயல்படுதலால் நூற்றுக்கணக்கான பெண்கள் காப்பாற்றப்பட்டனர். டோனாவூரின் நட்சத்திரக்கூட்டத்தில் இணைந்தனர்.

"உறக்கம் தெளிவோம் உற்சாகம் கொள்வோம் உலகத்தின் இறுதிவரை, கல்வாரி தொனிதான் மழைமாரி பொழியும் நாள்வரை உழைத்திடுவோம்" என்னும் எமில் ஜெபசிங் அண்ணன் எழுதிய பாடல் நூற்றுக்கணக்கான மக்களைத் தட்டி எழுப்பிச் செயல்பட வைத்தது.

**ஜெபத்தில் தீவிரம் - கொள்கையில் தீவிரம் - செய்கையில் தீவிரம்.**
**இயேசுவுக்காக தீவிரம் தேவை.**

தன்வரலாற்றுத் தொடர்

கனவு காண வா!

10

# மனாசேயா? எப்பிராயீமா? யார் முதலில்?

அறிவு

(பழைய ஏற்பாட்டு யோசேப்பின் வாழ்க்கை வரலாறு)

யோசேப்பாகிய என்னுடைய குடும்பம், இப்போது எகிப்திலே எனக்கு அருகிலேயே இருந்தது. என்னுடைய அண்ணன்மாரில் சிலருக்குப் பார்வோனின் ஆடுமாடுகளைக் கவனித்துக்கொள்ளும் வேலைகளும் கிடைத்தன. என்னுடைய ஏராளமான வேலைப்பளுவின் நடுவிலும், குடும்பத்தாரை அடிக்கடி பார்க்கச் செல்லுவேன். குறிப்பாக, என்னுடைய தந்தையான யாக்கோபு என்னும் இஸ்ரவேலைப் பார்க்கச்செல்லுவேன். காரணம்: நான் அவருக்குப் பிரியமான மகன் என்பது ஒருபுறம், அவர் எனக்கு என் சகோதரரை விடப் பிரியமான தந்தை என்பது மறுபுறம்.

உலகத்தையும், அண்ட சராசரங்களையும் படைத்த தேவாதி தேவன் என்னும் படைப்புக்கடவுளே, இப்போதெல்லாம், "ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தர்" என்று அறியப்படுகிறார். என்னுடைய எல்லாச் சூழ்நிலைகளிலும் என்னோடு இருந்த – இருக்கிற கர்த்தர் அவர். அவர் என் முற்பிதாக்களின் கர்த்தர் – இப்போது என் கர்த்தர்.

எகிப்தில் உள்ள பலவகையான தெய்வங்கள் என்னை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒருவகையில் என் தந்தை எனக்கு இளம்வயதிலேயே இந்த உண்மையான தெய்வமாகிய "யாகுவே" என்னும் "எல்ஷடாயை" அறிமுகம் செய்ததும், அவர் எப்படி என்னுடைய பெரிய தாத்தாவான ஆபிரகாமை அழைத்து, வழி நடத்தி வந்தார் என்பதை அடிக்கடி நினைவூட்டியதுமே காரணம்.

ஒருநாள் என்னுடைய அலுவலர்கள் என்னிடம் "உங்களுடைய தந்தையாரின் உடல்நிலை சரியில்லை" என்று அறிவித்தார்கள். உடனே அவரைப்பார்க்க என்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்துக்கொண்டு கிளம்பிப் போனேன். மூத்தவன் மனாசே – இளையவன் எப்பிராயீம்.



படுக்கையிலேயிருந்த என்னுடைய தகப்பனாரிடம் "உங்கள் மகன் யோசேப்பு வந்திருக்கிறார்" என்று சொன்னார்களாம். அவர் பெருமுயற்சி செய்து கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தார். நானும் என் மகன்களும் அவர் அருகில் அமர்ந்தோம். அவர் எங்களோடு பேசத்தொடங்கினார்:

"எல்லாம் வல்ல இறைவன் (எல்ஷடாய்) லூஸ் என்னும் இடத்தில்

எனக்குக் காட்சியளித்தார் (தரிசனமானார்). அவர் என்னை ஆசீர்வதித்து, உன்னைப் பலுகவும், பெருகவும் பண்ணுவேன் என்றும், உன் சந்ததிக்கு இந்த தேசத்தை நித்திய சுதந்திரமாகத் தருவேன் என்றும் வாக்குரைத்தார்.

நான் எகிப்துக்கு வருமுன் உனக்குப்பிறந்த இரண்டு மகன்களும் என்னுடையவர்கள். ரூபன், சிமியோன் போலவே எப்பிராயீமும், மனாசேயும் என்னுடையவர்கள்." இதைக்கேட்டதும் எனக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி கலந்த வியப்புத் தோன்றியது.

மனாசே என் முதல் மகன். எப்பிராயீம் என் இரண்டாவது மகன். ஆனால் என் தந்தை இரண்டாவது மகனான எப்பிராயீமை முதலில் சொல்லுகிறாரே என்று நினைத்தேன். ஒருவேளை அவருடைய முதிர்வயதினால் இந்தப் "பெயர்குழப்பம்" வந்திருக்கலாம் என்று கருதினேன்.

அவர் அந்த இருவரையும் பார்த்தார். அவர்களைத் தான் ஆசீர்வதிக்கும்படி தன் அருகில் கொண்டு வரும்படி சொன்னார். முதலில் அவர்களை அணைத்து முத்தம் செய்தார். பின்னர் ஆசீர்வதிக்கத் தயார் ஆனார்.

நான் முதலில் அவரைத் தரைமட்டும் குனிந்து வணங்கினேன். பின்னர் அவருடைய வலது கைக்கு முன்பாக மூத்த மகனான மனாசேயையும், இடது கைக்கு முன்பாக இரண்டாவது மகனான எப்பிராயீமையும் நிறுத்தினேன்.

ஆனால் அவர் செய்த செயல் இன்னும் வியப்பளித்தது. தன் வலது கையைக் குறுக்காக நீட்டி முதலில் இளையவனான எப்பிராயீமின் தலைமீதும், இடது கையை மூத்தவனான மனாசேயின் மீதும் வைத்தார். அவருடைய சிறப்பான ஆசீர்வாதம் இப்படி அமைந்தது:

என் பிதாக்களாகிய ஆபிரகாமும், ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல், இந்த நாள்வரைக்கும் என்னை ஆதரித்து வந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் என்னை மீட்ட தூதனுமானவர், இந்தப்பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக. என் பெயரும், என் தந்தையாரான ஆபிரகாம், ஈசாக்கு என்பவர்களின் பெயர்களும் இவர்கள் மூலம் நிலைநிற்பதாக. பூமியிலே இவர்கள் பெருந்திரளாய் பெருகுவார்களாக".

ஆனால் அவருடைய வலது கை இளையவனான எப்பிராயீம் மேல் இருந்ததும், இடது கை மூத்தவனான மனாசேயின் மேல் இருந்ததும் எனக்குப்பிடிக்கவில்லை. (எங்களுடைய பண்பாட்டின்படி வலதுகை ஆசீர்வாதம் இடதுகை ஆசீர்வாதத்தைவிடச் சிறந்தது). ஆகவே அவர் வலதுகையை எடுத்து மனாசேயை ஆசீர்வதிக்கும்படி முயற்சி செய்தேன்.

அத்துடன், "மூத்தவனான மனாசேயின்மேல் உங்கள் வலது கையை வையுங்கள்" என்றும் கூறினேன். அவர் சொன்ன காரியம் இன்னும் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

"யோசேப்பு என்னும் என் அருமை மகனே, அது எனக்குத்தெரியும். மூத்தவனான மனாசேயும் பெருகுவான். ஆனால், அவன் தம்பியான எப்பிராயீம் அவனிலும் பெருகுவான்.

அதுமட்டுமல்ல, மக்கள் வாழ்த்தும்போது எப்பிராயீமைப்போலவும், மனாசேயைப் போலவும் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று இனிமேல் வாழ்த்துவார்கள்".

அவர் யாக்கோபு என்னும் இஸ்ரவேல். ஈசாக்கின் மகன். ஆபிரகாமின்

பேரன். கர்த்தரை முகமுகமாய் பெனியேலில் கண்டவர். அவருக்கு நான் எப்படி அறிவுரை சொல்லமுடியும்? அமைதியாய் சிந்தித்தேன்.



ஆபிரகாமின் முதல் மகன் இஸ்மவேல். ஆனால் கர்த்தர் அவரைத் தெரிந்தெடுக்கவில்லை. ஈசாக்கையே தெரிந்தெடுத்தார். ஈசாக்கின் முதல் மகன் ஏசா (என் பெரியப்பா) – ஆனால், கர்த்தர் அவரைத் தெரிந்தெடுக்கவில்லை; யாக்கோபையே (என் அப்பாவையே!) தெரிந்தெடுத்தார்.

இப்போது என்னுடைய மூத்த மகனான மனாசேயைவிட இளையவனான எப்பிராயீமை அவர் தெரிந்தெடுத்து, அதிகம் ஆசீர்வதிக்கிறார்.

யோசேப்பாகிய எனக்கு முன்னால் பிறந்த ரூபன், சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன் என்னும் பத்து அண்ணன்மார்கள் இருக்கையில் என் தகப்பன் என்னை அதிகம் நேசித்தார். எனக்கு அவர்களுக்குக் கிடைக்காத பல வர்ண அங்கியைப் பரிசளித்தார். ஓர் அடிமையாய் எகிப்திற்கு வந்த நான் இன்று பேரரசர் பார்வோனுக்கு அடுத்தபடியாக உள்ளேன்.

இவையெல்லாமே கர்த்தரின் தெரிந்தெடுப்புத்தான். முந்தினோர் பிந்தினோராவார் என்னும் பழமொழி நிறைவேறுகிறது. அதுமட்டுமல்ல, கடவுளின் தெரிந்தெடுப்பை நாம் விளங்க முடியாது– எந்தக் கேள்வியும் கேட்கமுடியாது என்னும் உண்மையும் விளங்குகிறது.

அதுதான், "தெரிந்தெடுப்பு இறையியல்" (Theology of Chosen) என்னும் உண்மை எனக்குப் புரிந்தது.

**கனவுகள் தொடரும்...**

*****

# 2025 ஆகஸ்ட் மாத வேத வினாக்களுக்கு விடைகள்

## யோவான் 15-21 அதிகாரங்கள் வரை

**பொருத்துக**

1. திதிமு – தோமா 21:2
2. ரபூனி – போதகரே 20:16
3. கொல்கொதா – கபாலஸ்தலம் 19:17
4. வசனம் – சத்தியம் 17:17
5. ஆதிமுதல் – சாட்சி 15:27

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. உபத்திரவம், திடன் கொள்ளுங்கள், ஜெயித்தேன் 16:33
2. கரையிலே, கரிநெருப்பு, மீன், அப்பத்தையும் 21:9
3. சிலுவையில், தோட்டமும், புதிய கல்லறையும் 19:41
4. மிகுந்த கனிகளைக், மகிமைப்படுவார், சீஷராயிருப்பீர்கள் 15:8
5. இயேசு , கெதரோன், ஆற்றுக்கு, தோட்டம் 18:1

**விடை எழுதுக**

1. பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு குறித்து 16:8
2. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும்அறிவதே 17:3
3. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் 15:14
4. ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கும் 18:14
5. பிலாத்து பிரதான ஆசாரியர் சேவகரிடம் 19:6

# துதித்து மன்றாடுவோம்

செப்டம்பர்-1

## தமிழ்நாடு

**கள்ளக்குறிச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. காவியகாந்த்**
**திருமதி.செல்வி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெள்ளிமலை, கென்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, வெளிமாநிலத்திற்கு வேலைக்கு சென்றவர்கள் சுக பத்திரமாய் திரும்பி வந்ததற்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட மலர், கோவிந்தன், வெள்ளையன், அஞ்சலி, ஷர்மிளா, சித்ரா, ராமச்சந்திரன், சக்தி முருகன் ஆகியோருக்காகத் துதிப்போம். பாண்டியன் தொடர்ந்து ஆலயம் வர ஜெபிப்போம்.

**கடலூர் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. M. லிங்கம்**
**திருமதி. கலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அருகேரி, வடகரை, எரப்பாவூர், மருவத்தூர், பொன்னேரி, பெண்ணாடம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஈஸ்வரி, அம்சவல்லி, திவ்யா, அஸ்வின், வளர்மதி, விக்னேஷ், ராணி ஆகியோருக்காக, சுரேஷ்–ராஜி தம்பதிக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்ததற்காக, விக்னேஷ், வீரமணி ஆகியோர் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். ஈஸ்வரி, விக்னேஷ், வீரமணி, வளர்மதி, ராணி ஆகியோர் இயேசுவை ஏற்றுக் கொள்ள, முருகானந்த் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, அருகேரி, பொன்னேரி சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. V.சிவராமன்**
**திருமதி. பெரியநாயகி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சுமைதாங்கி, செம்பேரி, இருளம்பட்டு, சின்ன கொசபள்ளம், கீரனூர் ஆகிய கிராமங்களுக்காக, ராஜமாணிக்கம் கண்பார்வை பெற்றதற்காக, வேல்முருகனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்காகத் துதிப்போம். கயல்விழி தோல் நோய் மற்றும் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ரேகா வயிற்று வலியிலிருந்து சுகம் பெறஜெபிப்போம்.

செப்டம்பர்-2

**நாமக்கல் மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. S. சாமுவேல்**
**திருமதி. ரோகிணி**

நற்செய்தி அறிவிக்க பட்ட மோகனூர், வண்டிகேட் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட வைதேகி, திருச்செல்வி, ஜீவிதா, பாப்பாத்தி, சுதர்சன், சுபாஷினி ஆகியோருக்காக, ஷோபனா, நவின் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். வைதேகி மனநோயிலிருந்து சுகம் பெற, திருச்செல்விக்கு நல்ல வேலை கிடைக்க, சுதர்சன், சுபாஷினி ஆகியோரின் கல்லூரித் தேவைகள் சந்திக்கப்பட, அருண் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**ஈரோடு மாவட்டம்**
**அருட்பணியாளர்:**
**திரு.G.தனம் யோகராஜ் – திருமதி.டான்சி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, குருவை ஆகிய கிராமங்களுக்காக, பிரியங்கா, பிரபா, கற்பகம், பானுமதி, இந்திராணி நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக, ஜோதிலட்சுமி, பெரியசாமி ஆகியோர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். ஜோதிலட்சுமி குடும்பம் இரட்சிக்கப்பட, பிரியங்காவின் கணவர் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற, கார்த்திகா, தீபிகா ஆகியோர் திருமுழுக்கு எடுக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. அதிசய அமலன்**
**திருமதி. ஆனந்தி விமலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆண்டிப்பாளையத்திற்காக, ஆனந்தி, லீதியாள் ஆகியோருக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக, ஈஸ்வரி சிறுவர் ஊழியத்தில் பங்கு பெறுவதற்காக, கேசவமூர்த்தி விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். அன்னக்கொடி, குப்பம்மாள், அமாவாசை, நாகம்மாள், முருகன், பெரியசாமி ஆகியோர் இயேசுவை ஏற்றுக்கொள்ள, குப்பம்மாள் பிசாசின் பிடியில் இருந்து விடுதலை பெற, அமாவாசை வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற, ரேவதிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, ஈஸ்வரி, நிகிலா, தீபா ஆகியோரின் கல்லூரிக் கட்டணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**செப்டம்பர்-3**

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. லூர்டஸ்**
**திருமதி. கிளாடிஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பில்சின்னம்பாளையம், குள்ளேகவுண்டனூர், உப்பிலியனூர், பூவலப்பருத்தி, சமத்தூர், கோட்டூர், வாய்க்கால்மேடு, கணபதிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, செல்வா, கனியமுதன், துர்கா, நடேசன், சண்முகம், மதியழகன் ஆகியோர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதற்காக, நான்சிக்கு பெண்குழந்தையை தேவன் தந்ததற்காக, மார்த்தாள் நிறைவான சுகம் பெற்றதற்காக, ஊழியருக்கு வாகனம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ராணிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சபையின் மராமத்து பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட, ஐசக், இஸ்ரவேல் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.எபிநேசர் உவைட்**
**திருமதி. மேரி**

ஆபிரகாம் விபத்தில் சிறுகாயத்துடன் பாதுகாக்கப்பட்டதற்காகத் துதிப்போம். தினேசுக்கு நிரந்தர வேலை கிடைக்க, சாமுவேல், பிரேம் ஆகியோர் ஆராதனையில் தடையின்றி கலந்து கொள்ள, பின்மாற்றத்தில் உள்ள ஈஸ்வரி, கருப்பசாமி ஆகியோர் மீண்டும் ஆலயம் வர, காளிமுத்து குடும்பம் இரட்சிக்கப்பட, கிருபைக்கு நிறைவான சுகம் கிடைக்க, நாத்தான் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட, கரட்டுப்பாளையம், தளவாய்பாளையம், பழையூர், பொன்னாடகவுண்டனூர் ஆகிய இடங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் :**
**திரு. இம்மானுவேல் கிளமென்ட் கிப்ட்சன்**
**திருமதி. செல்லாண்டீஸ்வரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நாட்டுக்கல்பாளையம் கிராமத்திற்காக, மணி நற்செய்தியை ஏற்றுக் கொண்டதற்காக, கருப்பாத்தாள்ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். தெரசா, மாசிலாமணி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரூபி, ஆனந்த், அம்சா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபிப்போம்.

**செப்டம்பர்-4**

**அருட்பணியாளர் :**
**திரு. R. ஸ்டீபன் செல்வகுமார்**
**திருமதி. கரோலின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வாழைக்கொம்பு கிராமத்திற்காக, திருமுழுக்கு பெற்ற பூங்கொடிக்காக, சுகன்யா, கோபாலகிருஷ்ணன், சந்திரா, சரஸ்வதி, கன்னீஸ்வரி, நடராஜ், சல்மா ஆகியோர் நற்செய்தியை ஆர்வமாகக் கேட்டதற்காக– ஆராதனையில் கலந்து கொண்டதற்காக, நஞ்சை கவுண்டம்புதூரில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, இஸ்லாமியர்களுக்கு நற்செய்தி அறிவிக்க வாய்ப்பு கிடைத்ததற்காகத் துதிப்போம். திருமுழுக்கு எடுக்க ஆயத்தமாக இருக்கும் சுவாதி, பழனி ஆகியோருக்காக, ஆலயத்திற்கு புதிதாக இடம் வாங்கப்பட, ஊழியருக்கு நிறைவான சுகம் கிடைக்க, உம் சல்மா புற்றுநோயிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

**திருப்பூர் மாவட்டம்**
**அருட்பணியாளர்: திரு. S. பால்ராஜ்**
**திருமதி. மரியாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குருணைக்கல்பட்டி கிராமத்திற்காக, வேல்விழிக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சை நல்லபடியாக நடைபெற்றதற்காக, ராமசாமி ரத்தசோகை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். செந்தில் (சர்க்கரை நோயினால் ஏற்பட்ட புண்)– நிஷாந்த் (தொண்டை சதை வளர்ச்சி)–சூர்யா (மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. பால்துரை**
**திருமதி. ஜெபரூபி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கிளாங்குண்டல், வடுகப்பட்டி, அறிவொளி நகர், புதுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்காக, மேரி இருதய நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். அருக்காணி, செல்வி, நடராஜ், சுமதி ஆகியோர் இரட்சிக்கப்பட, நடக்க முடியாமல் இருக்கும் சண்முகம் நிறைவான சுகம் பெற, சம்பத்குமாருக்கு திருமணம் நடைபெற ஜெபிப்போம்.

**செப்டம்பர்-5**

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் :**
**அருள்திரு. சாலமோன்ராஜ்**
**திருமதி. ஜெயக்கொடி**

தடைபட்டிருந்த சிவக்குமார், சந்திரன், எஸ்தர், பூபாலன் ஆகியோருடைய வீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதற்காக, சங்கீதா, பெஞ்சமின், குமார், மஞ்சுளா ஆகியோர் வீடு கட்ட இடம் வாங்கியதற்காக, பாப்பா, மரகதம், திருமா, ஈஸ்வரி, கந்தசாமி ஆகியோர் புதிதாக ஆலயம் வந்ததற்காக, கலையரசி, மணிமேகலை, சந்தியா, சரஸ்வதி ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, சிவராஜ், செல்லம்மாள், மாலதி, லதா, சுமதி ஆகியோர் ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். செல்விக்கு (கழுத்து, தோள்பட்டை வலி, தோல் நோய்) நிறைவான சுகம் கிடைக்க, கண் பார்வையற்ற கோபால், சத்தியா, சாமுவேல் ஆகியோரைத் தேவன் பாதுகாக்க, செல்லம்மாள், ஆறுமுகம் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, காளியம்மாள், கோபால், சத்தியா, பாப்பா ஆகியோர் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, ஊழியர் முதுகு தண்டுவட நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**திருச்சி மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. S.ஜெயக்குமார்**
**திருமதி. மரிய செல்வம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உப்பிலியாபுரம், வெங்கடாசலபுரம், சிக்கந்தப்பூர்பாளையம், சிக்கந்தப்பூர் சோபனபுரம், கொட்டம்பட்டி, மங்கபட்டி, வைரசெட்டிபாளையம், மாராடி, ஒக்கரை, புதுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, பார்வதிக்கு கிடைத்த சுகத்திற்காக, சேகர் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, சம்பத்துக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைத்ததற்காகத் துதிப்போம். ராஜதுரை குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, கமலம் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற, ராஜேஸ்வரிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, பிரகாஷின் தொழில் ஆசீர்வதிக்கப்பட, ஊழியருக்கு வீடு விரைவாக கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு.B. தினேஷ் – திருமதி. எமீமா பியூலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கீழ்குறிச்சி, பொன்மலைப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ஊழியரின் மனைவிக்கு நிறைவான சுகம் கிடைக்க, பிரியாவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, சிவா புதிதாக தொடங்கவுள்ள தொழில் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-6**

**மதுரை மாவட்டம்**
**அருட்பணியாளர் : திரு. வின்சென்ட்**
**திருமதி. பவுலின் கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சின்ன வாகைக்குளம், பெரிய வாகைக்குளம், தாழையூத்துப்பட்டி, முண்டுவேலம்பட்டி, ஒத்தவீடு, கீழக்குயில்குடி ஆகிய கிராமங்களுக்காக, அம்ரீஷ் (14 வயது–

சர்க்கரை நோய்)– புஷ்பம் (கை, கால்,மூட்டு வலி) ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காக, மகேந்திரன் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காகத் துதிப்போம். கலையரசி, பழனியம்மாள், சீமகாளை, வள்ளி, அகிலா, சரசு, விஜயா, பூஜா, நாகம்மாள், சிவா, சவீதா, கலைமணி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. பிரவீன்குமார்**
**திருமதி. மீனா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சமத்துவபுரம், சுப்பலாபுரம், குளத்துவாய்பட்டி, காமாட்சிபுரம், வெயிலுகந்தாபுரம், வீரப்பெருமாள்புரம், தூம்பக்குளம், திருமால் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியைக் கேட்ட மணி, ரமேஷ், வெங்கடேசன், ராஜா, காளிமுத்து, கவின், செல்வி, ராஜாமணி, காளியம்மாள் ஆகியோருக்காக, மீனா அம்மை நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, மதன் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஜேம்ஸ் விவசாயம் ஆசீர்வதிக்கப்பட, பஞ்சவர்ணம் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, கருப்பு வீடு கட்ட தேவையான பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. M. கார்த்தி**
**திருமதி. ரீஜா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சென்னம்பட்டி, பூசலாபுரம், புதுப்பட்டி, ஜம்புலாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட பிரகாஷ், சுரேஷ்குமார், விஜயா, நித்யா ஆகியோருக்காக, சுரேஷ்குமார் நிறைவான சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். தானியேல், எரேமியா, அபி ஆகியோர் தடையின்றி திருமுழுக்கு எடுக்க, ஸ்டீபன், இஸ்ரவேல், சுப்பிரமணி, காலேப் ஆகியோரின் வியாபாரம் ஆசீர்வாதமாக நடைபெற, ரெபேக்காவின் மகன் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. கந்தசாமி**
**திருமதி. முருகம்மாள்**

(செப்டம்பர்-7)

நற்செய்தி கேட்ட அனுஷ்கா, ரேஷ்மா, சச்சின், வெள்ளத்தாய், குமார் ஆகியோருக்காக, ஆசா தொண்டை வலியிலிருந்து சுகமானதற்காக, தியாகராணி கால் நரம்பு நோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். ரேஷ்மா மஞ்சள் காமாலை நோயிலிருந்து சுகம் பெற,அனுஷ்கா– ரேஷ்மா குடும்பமாக இரட்சிக்கப்பட, ஜெயராணி விபத்தினால் ஏற்பட்ட கால் வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. P. சத்தியநாதன்**
**திருமதி. கிறிஸ்டி**

நற்செய்திப்பணி செய்யப்பட்ட போத்தநதி, ரெட்ரப்பட்டி, முத்துலிங்காபுரம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பாண்டீஸ்வரி, கனகலட்சுமி, சாந்திபிரியா, வர்ஷினி, சரஸ்வதி, ராமதாய், ஜெயலட்சுமி, ராணி தீபா, சங்கரேஸ்வரி ஆகியோருக்காக, சிறுவர் ஊழியம் தடையின்றி நடைபெறுவதற்காகத் துதிப்போம். பாக்கியலட்சுமி கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, பானுவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சுப்புலட்சுமி குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :திரு. P. ராஜா**
**திருமதி. அன்னாள்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கரடிக்கல் கிராமத்திற்காக, நற்செய்தி கேட்ட மகேஷ், ராஜன், பாலு, சுரேஷ், சங்கீதா, கீர்த்தனா, ஆகியோருக்காக, ஜெயந்தி கடுமையான கால் வலியிலிருந்து சுகம் பெற்றதற்காக, தினகரன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்ட பாலு, சுரேஷ், ராஜன் சங்கீதா, கீர்த்தனா, ஆகியோர் இரட்சிக்கப்பட, சபைக்கு வந்து கொண்டிருக்கும் 10 சிறுவர்கள் மூலம் அவர்கள் குடும்பங்கள் இரட்சிக்கப்பட, தினகரன் சர்க்கரை நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. காளிமுத்து**
**திருமதி. குமுதா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்காமநல்லூர், அழகுரெட்டிபட்டி,

காளப்பன்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, ராஜசேகர் வீட்டில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்திற்காக, அழகுரெட்டிபட்டியில் தொடங்கப்பட்ட சிறுவர் ஊழியத்திற்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் ராணியம்மா, சுந்தரி, மனோகர் ஆகியோருக்காகத் துதிப்போம். ராணி, மனோகர் ஆகியோர் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற–இரட்சிக்கப்பட, சௌந்தரபாண்டியனுக்கு இடது கண் பார்வை கிடைக்க, காசிமாயன் நுரையீரல் நோயிலிருந்து சுகம் பெற, சுந்தரிக்கு சமாதானம் கிடைக்க, மாயி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற–இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-8**

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. ஏனோக்**
**திருமதி.பாலின் சௌந்தர்யா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜோதிமாணிக்கம், கொடிக்குளம் ஆகிய கிராமங்களுக்காக, தேவிக்கு மார்பகக்கட்டி அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றதற்காக, ஈசாக்கு பேருந்து விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சாமுவேல், மகாபாரதி, மகாராணி, யோசனை ஆகியோர் திருமுழுக்கு பெற்றதற்காக, பாக்கியம் தொண்டை வலியிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சிறுவர் ஊழியம் தடையில்லாமல் நடைபெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**

**அருட்பணியாளர் : திரு. M. அகஸ்டின்**
**திருமதி. ஜோஸ்பின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்லம்பட்டி, மணல்பட்டி, காந்திநகர் சங்கம்பட்டி, கருமாத்தூர், பாலூத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, அன்னாளுக்கு கிடைத்த சுகத்திற்காக, சுவாதி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காக, நவ கீர்த்தி சிறுநீரக நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, கோபால் புதிதாக கடை திறந்ததற்காக, தனத்திற்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். சுதா இடுப்பு வலியிலிருந்து சுகம் பெற, சின்னப்பிள்ளை வீட்டில் சமாதானம் கிடைக்க, சபை வாலிபர்களுக்கு நல்ல வேலை கிடைக்க, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர, ரம்யாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, மேரிக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**சகோதரி. எஸ்தர் செல்வராணி**

நற்செய்தி பணி செய்யப்பட்ட லிங்கப்பநாயக்கனூர், சுளிஒச்சான்பட்டி, திம்மநத்தம் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மாயக்கா, சக்தி, மாயி, சகா, முத்துக்கருப்பன் ஆகியோருக்காக, புதிதாக சபைக்கு வந்த மூக்கம்மாளுக்காக, ரதிக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஜெயச்சந்திரனின் இடம் விற்கப்பட, விபத்தினால் கால் முறிவு ஏற்பட்டுள்ள ஜோசப்புக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**செப்டம்பர்-9**

**அருட்பணியாளர் :**
**திரு. பிலிப் முருகன்**

சாம்– பூவிதா தம்பதியினருக்கு பெண் குழந்தை பிறந்ததற்காக, எஸ்தர் ராணி மீண்டும் சபைக்கு வந்ததற்காக, ஆகாஷ்–பிரவீனா திருமணம் முடிந்ததற்காகத் துதிப்போம். எஸ்தர் ராணி, கொடியம்மாள் ஆகியோர் வீடு கட்டி முடிக்கப்பட, ஷாமுக்கு நல்ல வேலை கிடைக்க, பூவிதாவிற்கு தையல் இயந்திரம் வாங்கப்பட, சிந்தியா, தங்கப்பாண்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, சந்தியா–அசோக்குமார் தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ராமசாமி ஐயா விடுதலை பெற, மீனா குடும்பம், வைஜெயந்தி குடும்பம், பாண்டியம்மாள் குடும்பம் இரட்சிக்கப்பட, தங்கமீனா கணவர் ஜெயிலில் இருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.M. மூவேந்திரன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அயோத்திப்பட்டி, வகுரணி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்காக, மோசஸ் மணிக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காக, ஸ்டெல்லாமேரி, லட்சுமி, முத்துச்சாமி,

அபர்ணா ஆகியோர் திருமுழுக்குப் பெற்றதற்காக, முத்துமாலாவுக்கு சுகப்பிரவத்தில் ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். பரமசிவம், வீரபாண்டி, பெருமாள், கமலக்கண்ணன், சித்ரா, ஆர்த்தி, அருண், கார்த்தி, சூரியா, சுருதி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஸ்டெல்லாமேரி, லட்சுமி, முத்துச்சாமி, அபர்ணா ஆகியோர் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. A. பால்ராஜ்**
**திருமதி. ஏஞ்சல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கூத்தியார்குண்டு, கப்பலூர், அகதிகள் முகாம் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட செல்வி, ஜெயக்குமார், சத்தியமூர்த்தி, மந்தீஸ்வரி, சுப்பிரமணியம், நாராயணன், கமலி, செல்லதுரை ஆகியோருக்காக, சந்தியா சோரியாசிஸ் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, பவித்ரா செய்வினை கட்டுகளில் இருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். மந்தீஸ்வரி-சுப்பிரமணியம் தம்பதியரின் இரு மகள்களும் கணவனுடன் இணைந்து வாழ-குடும்பமாக இரட்சிக்கப்பட, கமலியின் கணவன் இரட்சிக்கப்பட- கடன் பிரச்சினையிலிருந்து விடுதலை பெற, ரெஜினா மேரி முடக்குவாத நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. G. ஜெகன்**
**திருமதி. திவ்யா**

செப்டம்பர்-10

நற்செய்தி அறிவிக்கப்பட்ட உச்சப்பட்டி, காந்திநகர் ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி கேட்ட ஜெயா, செல்லத்துரை, ராமர், கௌசல்யா, மகேஷ் ஆகியோருக்காக, கரிகாலனுக்கு உயர் ரத்த அழுத்த நோயிலிருந்து சுகம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ஜெயராணி கர்ப்பப்பைக்கட்டி நோயிலிருந்து சுகம் கிடைக்க, ஞானமுத்து சிறுநீரக செயலிழப்பு நோயிலிருந்து சுகம் பெற, முனீஸ்வரி கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, இந்திரா நகர், சிவன் நகர் ஆகிய பகுதிகளில் தடைப்பட்டு போன சிறுவர் ஊழியம் மீண்டும் ஆரம்பிக்கப்பட, ஜெலினுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் :**
**திரு. ஜஸ்டின் சாமுவேல் – திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாய் கார்டன், சம்பங்கிநகர், காந்திநகர், அம்பேத்கர் நகர், பத்மா நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட நாகலட்சுமி, பேச்சியம்மாள் ஆகியோருக்காக, இலவச மாலைநேர வகுப்பு புதிதாக துவக்கப்பட்டதற்காக, இதன்மூலம்,பிள்ளைகள் கல்வி மற்றும் வேதவசனத்திலும் விசுவாசத்திலும் வளர்வதற்காக, பன்னீர்செல்வம் மீண்டும் குடும்பமாக ஆலயம் வந்ததற்காகத் துதிப்போம். நிவேதா-பாலாஜி தம்பதியருக்கு சமாதானம் கிடைக்க, ரேஷ்மா, பிரியா ஆகியோர் ஆராதனையில் கலந்துகொள்ள, தடைப்பட்டு நிற்கும் சக்திநகர் ஊழியம் மீண்டும் ஆரம்பிக்கப்பட, வேல்சாமி நகர், டைட்டல் நகர் பகுதிகளில் சிறுவர் ஊழியம் துவங்கப்பட ஜெபிப்போம்.

**சுயசார்புத் திருச்சபை**
**அருட்பணியாளர் : திரு. வயநாட்டுமுத்து**
**திருமதி. கனியமுது**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சொரிக்காம்பட்டி கிராமத்திற்காக, ஏஞ்சலினாவுக்கு விவசாயக் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்ததற்காக, ஐசக் விபத்திலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, ஊழியர் மனைவிக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம். முத்துலட்சுமி, கனகா, பாண்டீஸ்வரி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சாந்தகுமார், சாமுவேல், சீதா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க-திருமணம் நடைபெற-நிரந்தர வேலை கிடைக்க, ஊழியம் செய்ய புதிதாக ஒரு வாகனம் வாங்கப்பட, ராணி, ஏஞ்சல் அமராவதி ஆகியோரின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, சபைக்கு வரும் முதியோர்கள் சுகம் பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு. J. ஜெயகுமார்**

செப்டம்பர்-11

**திருமதி. கனி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அடைக்கம்பட்டி, முத்துப்பட்டி, மணப்பட்டி, வெள்ளப்பாறைபட்டி, தனக்கன்குளம் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். முகிலன், ஆகாஷ், அஸ்வின் ஆகியோர் திருமுழுக்கு எடுக்க, முத்துராமனுக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

### தேனி மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. P. தேவதாஸ்**
**திருமதி. பிலோமினா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலக்கோம்பை கிராமத்திற்காக, நற்செய்தியை ஆர்வமாகக் கேட்ட ராஜா, பொன்னுத்தாயம்மாள், தாமரைக்கண்ணன் ஆகியோருக்காகத் துதிப்போம். சின்னம்மாவுக்கு செவிலியர் வேலை கிடைக்க, நாமக்கோடிக்கு சுகம் கிடைக்க, வண்டியூர், ராய வேலூர் ஆகிய இடங்களில் ஜெபக்கூடுகை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர் : திரு.G. நாதன்**
**திருமதி. மேகலா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பொன்னம்மாள்பட்டி, அடைக்கன்பட்டி, மீனாட்சிபுரம் ஆகிய கிராமங்களுக்காக, நாகரத்தினத்திற்கு ஆண் குழந்தை கிடைத்ததற்காகத் துதிப்போம். செல்வகுமார், ஹேமலதா ஆகியோருக்கு விரைவில் திருமணம் நடைபெற, விபத்தினால் பாதிக்கப்பட்ட ராஜகிருஷ்ணன் விரைவில் சுகம் பெற, சுரேஷ் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, கை கால் செயலிழந்துள்ள செல்வராஜுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

செப்டம்பர்-12

**அருட்பணியாளர் :**
**திரு.J.உலகநாதன்–திருமதி. சுபா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மேல்மங்கலம், வடுகப்பட்டி, தாமரைக்குளம், அழகர்நாயக்கன்பட்டி, பெரியகுளம் ஆகிய பகுதிகளுக்காக, முருகேஸ்வரி, பிச்சை ஆகியோருக்கு தேவன் தந்த சுகத்திற்காக, ராஜேந்திரன் குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காக, மகேந்திரனுக்கு திருமணம் நடைபெற்றதற்காகத் துதிப்போம். புவனா, முருகேஸ்வரி, இருளாயி, ரகுபதி, மீனாட்சி, ராஜேந்திரன் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஜெயலட்சுமி கால் வலியிலிருந்து சுகம் பெற, சாமந்திகா, பஞ்சவர்ணம் ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### விருதுநகர் மாவட்டம்

**அருட்பணியாளர் :**
**அருள்திரு.B. சாமுவேல் கணேசன்**
**திருமதி. விஜயா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தண்டியனேந்தல், தோணுகால் ஆகிய கிராமங்களுக்காக, செல்லப்பன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று–மீண்டும் ஆலயம் வந்ததற்காகத் துதிப்போம். ஈஸ்வரி இரட்சிக்கப்பட, வள்ளியின் கணவர்–பிள்ளைகள் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சபை மூப்பர் சந்தியாகு சர்க்கரை நோயிலிருந்து நிறைவான சுகம் பெற ஜெபிப்போம்.

### தென்காசி மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு. J. பவுல்ராஜ்**
**திருமதி. எமீமாள்.**

இதயக்கனிக்கு சுகப்பிரசவத்தில் ஆண்குழந்தை பிறந்ததற்காக, சண்முகத்தாய் சிறுநீரக கல் நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக, ஜோதிமணி பித்தப்பை அறுவைச்சிகிச்சையிலிருந்து சுகம் பெற்றதற்காக, யோபு ஆலயம் வருவதற்காகத் துதிப்போம். லூர்தம்மாளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, ஜஸ்டின் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற–இரட்சிக்கப்பட, முத்துக்குமரேஸ்வரி, ரூபி கணவர் ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜமுனாவுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, அந்தோனியம்மாள் கால்வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

செப்டம்பர்-13

### விழுப்புரம் மாவட்டம்

**அருட்பணியாளர் : திரு.D. தங்கராஜ்**
**திருமதி. எஸ்தர் பிரியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மடப்பட்டு,

கருதப்பட்டு ஆகிய கிராமங்களுக்காக, தாட்சண்யாவிற்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை கிடைத்ததற்காக, இளையராஜா, அபினேஷ், மகேஷ் ஆகியோர் நிறைவான சுகம் பெற்றதற்காக, டைசனுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பிரவீன்–சந்தியா, பார்த்திபன் மனைவி ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, பிரபா–மகேந்திரன் குடும்பமாக சேர்ந்து வாழ, பாலகிருஷ்ணன், சந்திரசேகர் ஆகியோர் இரட்சிக்கப்பட–குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, முனீஸ்வரனிடம் கடன் வாங்கியவர்கள் திரும்பக் கொடுக்க, கிரேசுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க, எஸ்தர் தவமணி எலும்பு நோயிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

**தரிசனம் பரப்புவோர்**

இயக்கத்தின் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட, புதிய தரிசனம் பரப்புவோர் கிடைக்க, புதிய ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட, செப்டம்பர் 21 முதல் 23 வரை நடைபெறவுள்ள தரிசனம் பரப்புவோர் குடும்பக்கூடுகை சிறப்பாக நடைபெற, திரு.T. விஜயசங்கர் (தரிசனம் பரப்புவோர் உதவி இயக்குநர்), அருள்திரு. பீட்டர் (ஜெப ஒருங்கிணைப்பாளர்), ஊழியர்கள்: திரு.R. பாலசுப்பிரமணியன், திருமதி. ஹெர்சி லீதியாள் மாசில்லாமணி, திருமதி.C. மேபல் ராணி, திருமதி. இந்திராணி கில்பர்ட், திருமதி. தீபா மோசஸ், திருமதி.J. பிளஸ்ஸி, திரு. வினு, திருமதி. ராணி வின்சென்ட், திரு.K. பால்ராஜ், திரு.S. சம்பத்குமார், திரு. தாங்லம் ஜோ, திரு. காளிமுத்து, திரு.A. தம்புராஜ், திரு.P. மாரியானந்தன், திருமதி. சுப்புலட்சுமி, திருமதி.T. சுசீலா, திரு.M.M. சாலமோன், திரு.F. ஹென்றி ஜார்ஜ், திருமதி.A. சம்மனஸ் மேரி, திரு.A. ஜோசப் ஆசீர்வாதம், திரு.A. மகுடீஸ்வரன், திரு.ஜேம்ஸ்.P. ரவிக்குமார், திருமதி. திருவாசகி, திருமதி. ஜான்சி தினா, திரு.S. கிருஷ்ணமூர்த்தி, திருமதி.V. சுவேகா, திரு.M. ஞானசேகரன், திரு. ஜெயராமன், திரு. கிறிஸ்டோபால் கணேஷ் ஆகியோரின் பயணப் பாதுகாவலுக்காக, குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**பணித்தளங்களின் பொறுப்பாளர்கள்**

அருள்திரு.V. இம்மானுவேல் பாண்டி (தென்னிந்திய பணித்தள உதவி இயக்குநர்), திரு.C. ராஜரத்தினம் (சொத்து பராமரிப்பாளர்), திரு. தாங் பாவ் ஹோகிப் (வடஇந்தியப் பணித்தள ஒருங்கிணைப்பாளர்) ஆகியோருக்காக ஜெபிப்போம்.

**மொழிபெயர்ப்புப் பணி**

மொழி பெயர்ப்பாளர் திருமதி. ஷீலா நாகராஜனுக்குத் தேவையான ஞானம் கிடைக்க, மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் திரு.சுக்மன் மாத்லாம், திரு.கசியா மாத்லாம், செல்வி.மங்கள்தாய் ஆகியோருக்காக, நடைபெற்றுவரும் பழைய ஏற்பாட்டு மொழி பெயர்ப்பு விரைவில் முடிவடைய, யாத்திராகமம் மற்றும் சங்கீதம் ஆகிய மொழி பெயர்ப்பின் ஆய்வுப்பணிகள் நல்லமுறையில் நடைபெற, கோண்டி மொழி ஆடியோ வேதாகமம், தேவையான கோண்டி மக்களுக்கு விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

**செப்டம்பர்-14**

**தலைமை அலுவலகம்**

பொதுக்குழுக்கூட்டம் நல்லமுறையில் நடைபெற்றதற்காக, நிதித்தேவைகள் சந்திக்கப்பட்டு வருவதற்காகத் துதிப்போம். அலுவலகத் தேவைகள் சந்திக்கப்பட, பொதுச்சேவகருக்கு இயக்கத்தை நடத்தத் தேவையான ஞானம், பெலன், வழிநடத்துதல் கிடைக்க, சென்னையில் இம்மாதம் 01 முதல் 04 வரை நடைபெறவுள்ள கோண்டி வேதாகம மொழிபெயர்ப்பு பயிற்சி நல்லமுறையில் நடைபெற, ஒடிசாவில் 09 முதல் 12 வரை நடைபெறவுள்ள வடஇந்திய அருட்பணியாளர்கள் பயிற்சி முகாம் ஆகியவை சிறப்பாக நடைபெற, பொதுச்சேவகர் அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன், துணைப் பொதுச்சேவகர் திரு.S. டேவிட் சாலமோன், அருள்திரு.G. பொன்னுராஜ், திரு.A. சாம் டென்சிங், திரு.A. ஆஷிஸ், திரு.Y. பிரான்சிஸ் ராஜா, திரு.V.S. தம்பிராஜ், திரு.S. ஞானசேகர்,

திரு.A. பிரபாகரன், திருமதி. ஜான்ஸி ஜெய கிருபா, திரு.D. சைமன், செல்வி. S.செஹானா ஜெசுனி, திருமதி. சாரா ஜான் ஆகியோருக்காக ஜெபிப்போம்.

வளரும் விண்ணரசு

ஒவ்வொரு மாதமும் இதழ் தடையின்றி வெளியிடப்படுவதற்காக– தேவைகள் சந்திக்கப்படுவதற்காகத் துதிப்போம். இதழில் கட்டுரை எழுதுபவர்களுக்காக, அவர்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, இதழிலுள்ள ஒவ்வொரு பகுதியும் வாசிக்கிறவர்களுக்கு பயனுள்ளதாக இருக்க, ஆசிரியர் குழுவினரின் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்பட, புதுமையான முறையில் இதழ் வெளியிடப்பட ஜெபிப்போம்.

**நிறுவனர்கள்**

டாக்டர்.N.J. ஞானையா மற்றும் திருமதி. ரஞ்சினி ஞானையா ஆகியோருக்காக, நிறுவனரின் எழுத்துப்பணி மற்றும் அருட்பணி ஊழியங்களுக்காகவும், திருமதி. ரஞ்சினி ஞானையா அவர்கள் பெண்கள் நடுவிலும், வேதபாட வகுப்புகள் மூலமும் செய்து வரும் அருட்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.

**செப்டம்பர்-15**

**நிர்வாகம்**

செயற்குழு உறுப்பினர்கள் திரு.J. எபிநேசர் மார்டின், Dr.S. அருண், திரு.K ஜான்சன், திரு.P. கோபால கிருஷ்ணன், Dr. தினகரன் ரிச்சர்ட், திரு. J.E. பால் ஆபிரகாம், திரு. வெஸ்லி ஜோயல் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காக ஜெபிப்போம்.

**இறையியல் கல்வி**

இறையியல் கல்வி பயிலும் 18 பேருக்காகத் துதிப்போம். சுரேந்திரா காவ்டே, திபேஷ் சலாம், உபேஷ் சலாம், ரமேஷ் வாடே, ராம்நாத் வாடே, லலிதா கருங்கா, சுனிதா வாடே, ரஜனி சலாம், சுக்யாரின் மண்டாவி, அஷ்வந்தி கச்லாம், சவிதா நுரெட்டி, சத்தியசீலன், ரெஜினா மேரி, பிரின்ஸ் ராய்சன், ரேணுகா, ராஜ்மன், சோம்சிங், நெதன்லங் ஆகியோர் சிறப்பான முறையில் இறையியல் கல்வி கற்றுத் தேற ஜெபிப்போம்.

**புலம்பெயர்ந்தோர் அருட்பணியாளர்:**

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அருட்பணியாளர்: திரு. ஒமெந்திராகுமார்**
**திருமதி. சவீத்தா குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேக்கம்புத்தூர், பட்டுசேரி, கோணம், ராமன்புத்தூர், ஆசாரிபள்ளம், சைமன் நகர் ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமார்சிங், சுனில்குமார், பப்பூ ஜாடவ், அர்சுன், லலன், நந்துசிங், விரேந்தர்குமார், லகேஷ் குமார், வினெய்குமார், சோனுகுமார், பப்லுகுமார், அமர்சிங், ஆசிஷ்குமார், மனிஷ் காதியா, குமரன்சிங், அர்விந்தஙகுமார், விவேக்குமார், விஜய்குமார் ஆகியோருக்காக, அர்ச்சனா, இவாஞ்சலின், ராகேஷ் ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். முகேஷ் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, மீரா சிறுநீரக செயலிழப்பு நோயிலிருந்து சுகம் பெற, விபத்தில் இரண்டு கால்களும் உடைந்த தில்சாத்திற்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**செப்டம்பர்-16**

**சென்னை மாவட்டம்**

**திரு. தினகரன்**
**திருமதி. லீனா குமாரி கிரேஸ்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெருங்களத்தூர், தாம்பரம், படப்பை, மேடவாக்கம், கேபிகே நகர், கல்லுக்குட்டை, கந்தன்சாவடி, தரமணி ஆகிய பகுதிகளுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஷீமா, அமீர், சந்தோஷ், யாசீர், முனியம்மாள், ஆலங், கோபிசந்த், சுக்கு, பாலாஜி, கௌரி, ஜோஷ்னா, இனோக், ஹெலன், சாமுவேல் ஆகியோருக்காக, நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் ஆலுங்கிற்காகத் துதிப்போம். மூர்த்தி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, சந்தோஷின் குடும்பத்தில் சமாதானம் கிடைக்க ஜெபிப்போம்.

**மத்திய இந்தியா – மகாராஷ்டிரா**
**அருட்பணியாளர்:**
**திரு. க்யானேஷ் லால்பகதூர் தாக்குர்**

ஜுனோனா, பத்மாபூர் ஆகிய இடங்களில் ஆராதனைகள் நடைபெறுவதற்காக, மாலைநேர வகுப்புகள் நடைபெறுவதற்காக, விஜய் கண்ணாகே குடும்பத்தில் சமாதானம் கிடைத்ததற்காகத் துதிப்போம். மாலைநேர வகுப்புகள் மூலமாக சந்திக்கப்படும் மாணவர்கள் இரட்சிக்கப்பட, நல்லமுறையில் கல்வி கற்க, லாகமில் ஆலயம் கட்ட இடம் வாங்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**
**திரு. ஃபனின்ட்ரா பார்**

நற்செய்திக்கூட்டத்தைத் தடுத்து நிறுத்த மதத்தீவிரவாதிகள் செய்த திட்டங்களை தேவன் தடுத்து நிறுத்தியதற்காகத் துதிப்போம். சபை தரத்திலும், எண்ணிக்கையிலும் வளர, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

# ICGM வங்கி கணக்கு விபரங்கள்

**அருட்பணியாளர் உதவி மற்றும் பொதுவான காணிக்கைக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 10143136773
Bank : State Bank of India
Branch Name : Selaiyur, Chennai-73
IFSC Code : SBIN0007948

icgm1014@sbi

**ஆலயக் கட்டிட நிதிக்காக**

Account Name : INDIA CHURCH GROWTH MISSION
Account Number: 11194454531
Bank : State Bank of India
Branch Name : Vinayaganagar, Madurai.
IFSC Code : SBIN0001479

**மருத்துவ நிதிக்காக**

Account Name : ICGM MEDICAL EMERGENCY ENDOWMENT FUND
Account Number: 31961036921
Bank : State Bank of India
Branch Name : SELAIYUR, Chennai-73.
IFSC Code : SBIN0007948

வங்கி மூலமாக காணிக்கைகளை அனுப்புபவர்கள், அவ்விபரங்களை நமது அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ, SMS மூலமாகவோ/ Whatsapp மூலமாகவோ 94421 50482 என்ற எண்ணுக்கு தகவல் அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

மேலேயுள்ள QR கோடை பயன்படுத்தியும் உங்களுடைய காணிக்கையைச் செலுத்தலாம்.

# தாமஸ் கெஜடன் ராக்லந்து

(1815-1858)



இங்கிலாந்து நாட்டில் ஒரு நல்ல பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் ராக்லந்து. மிகச்சிறப்பாகப் படிக்கும் ஆற்றல் வாய்ந்த அவர் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படித்து அங்கேயே பேராசிரியராகவும் பணிபுரியத்தொடங்கினார். அந்த சமயத்தில் CMS (Church Missionary Society) என்னும் அருட்பணியியக்கம் இந்தியாவிற்கு அருட்பணியாளர்களை அனுப்ப விரும்பியது. அதன் செயலராக இருந்த ஹென்றி வென் (Henry Venn) கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஓர் அறைகூவல் செய்தி அளித்தார். அந்தச் செய்தியால் தொடப்பட்ட ராக்லந்து தன்னை அருட்பணிக்கு அர்ப்பணித்து இந்தியா செல்ல பயிற்சி பெற்றார்.

1845ஆம் ஆண்டு தனது 30ஆம் வயதில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். விரைவாக தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். தமிழகம் முழுவதும் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது வடதிருநெல்வேலிப் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு நற்செய்தி தேவை என்பதை உணர்ந்தார். ஊர் ஊராகச் சென்று நற்செய்தி அறிவிக்கும் திட்டம் ஒன்றை (Itinerant Evangelism) உருவாக்கினார். அதைத் தாமே செயல்படுத்தவும் தொடங்கினார். சுமார் 1000 கிராமங்களுக்கு அவர் நற்செய்தியை அறிவித்தார் என்று கூறப்படுகிறது.

கொடுமையான வெயில், மாட்டுவண்டிப் பயணங்கள், சில மக்களிடம் இருந்து வந்த கடுமையான எதிர்ப்புக்கள் – இவையெல்லாம் அவர் உடல் நலத்தை மிகவும் பாதித்தன. சில சமயங்களில் பசியோடு பணியாற்றினாராம். ஒருமுறை பசியால் தன் தொப்பியிலே கூழ் வாங்கிக் குடித்தாராம். மற்ற அருட்பணியாளர்கள் பெரிய பங்களாக்களில் வாழ்ந்த அந்தக் காலத்தில் ஒரு சிறிய வீட்டில் மிக எளிமையாக வாழ்ந்தாராம்.

அவருக்குப் பிடித்தமான வசனம், ஆண்டவராகிய இயேசு சொன்ன, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24).

சிவகாசியைச் சுற்றியுள்ள கிராமங்களில் நற்செய்தி அறிவித்து வந்த காலத்தில் காசநோயால் (Tuberculosis) பாதிக்கப்பட்டு தனது 43ஆம் வயதில் 1858இல் இறந்தார். அவரது உடல் சிவகாசி அருகே அடக்கம் செய்யப்பட்டது. இன்றும் அவர் கல்லறை அங்கே உள்ளது.

திருமணமே ஆகாமல் தமிழ்நாட்டில் 13 ஆண்டுகள் நூற்றுக் கணக்கான கிராமங்களில் நற்செய்தி அறிவித்த அவரை "**வடதிருநெல்வேலி அப்போஸ்தலர்**" என்று அழைக்கின்றனர். அவரது நினைவாகக் கட்டப்பட்ட பெரிய ஆலயம் இன்றும் சிவகாசியில் உள்ளது. இயேசுவுக்காக வாழ்ந்து, கோதுமை மணியாக உயிரிழந்த தாமஸ் ராக்லந்தை நாம் மறக்கவே முடியாது.

➪➪➪

## வட இந்தியா

**அருட்பணியாளர்கள்:**

**திரு. லால்துராம் சலாம்.**

செப்டம்பர்-17

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாலர்மேடா, கோர்காவ், முல்லே, தெலன்கா, போல்பா, கானாகாவ், மாட்டலா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ராம்பொரஸ் போயாம்**
**திருமதி. சங்கீதா போயாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கொங்கேரா, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களுக்காக, பூஜாவாகி, மலேச்சூர் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காகத் துதிப்போம். சோனு சலாம் (பக்கவாதம்), மகேஷ் (மூல நோய்), சுகுல் சலாம் (முழங்கால் வலி) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ககரு இரட்சிக்கப்பட, பஜ்ராவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்து சலாம்**
**திருமதி. சோன்பத்தி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்காவ், குருஸ்நார், படே ஜம்ரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட பில்லு, சுக்லால், சுக்மதி ஆகியோருக்காக, குரூஸ்நார், போர்காவ் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, அனிதாவுக்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, சுக்மதிக்கு அறுவைச் சிகிச்சை நல்லமுறையில் நடைபெற்றதற்காக, மெகத்தின் மனநோயிலிருந்து சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். சௌகான் உய்கே, சங்கர் உய்கே, சீதாராம் உய்கே, ராம்சன், குஸ்சன், சுர்சு கச்லாம், ராம்பால் உய்கே, சந்த்நாத், மகேஸ்வரி ஆகியோர் இரட்சிக்கப்பட, கம்ஷீலா, கேசவ் கச்லாம் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மங்கலு மாத்லாம்**
**திருமதி. சுசீலா மாத்லாம்**

செப்டம்பர்-18

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாட்பால், ஷியாநார், பூசுவால் ஆகிய கிராமங்களுக்காக, பாட்பால், ஷியாநார் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் நடைபெறுவதற்காக, சாந்தி விஷப்பாம்பின் கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டதற்காக, சருதாவுக்கு கிடைத்த சுகத்திற்காக, சோம்ஷி ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். சோனா, சுக்தாய், சன்வரி, தனோக் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, உஜாரோ பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, சந்தோர் இரட்சிக்கப்பட, பில்லு சுக்மதி (இரத்தக்குறைவு), ஜெய்மதி (நுரையீரல் நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, ரஸ்மதி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற, ஜேனு விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. கஸியா துக்கா**
**திருமதி. ரூப்பாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாக்ரி, அமாஸாரா, கோகுடா, மிஸ்ரி, போங்காபால், ஆத்வால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சன்பத்தி போயாம், ரிஸ்மதி கச்லாம், விவஸ் சலாம் ஆகியோருக்காக, சதேராம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். ராம்பத்திக்கு நிறைவான சுகம் கிடைக்க, கம்லி விசுவாசத்தில் வளர, தஸ்ரத் விவசாயம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சாது துக்கா**
**திருமதி. ரசாய் துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஆம்காவ், சிப்ரேல், மஸ்பூர், தெர்தூல், தாடோநார், தாடோபால் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். சோம்பதிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, சுக்கோவிற்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

செப்டம்பர்-19

**அருட்பணியாளர்: திரு. புத்சிங் வட்டே**
**திருமதி. ரெய்னி வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஓங்நார், மட்டாவண்ட், மாத்லா, ஏதேம்பால் ஆகிய

கிராமங்களுக்காக, சுக்சிங், சந்திரபதி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைத்ததற்காக, சீதாராமின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காக, ராம்பதி மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். ஜெய்மதி (இரத்த அழுத்த நோய்), சோனி (நெஞ்சு வலி), சுகந்தி (எலும்பு நோய்) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜஃகுல் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சாந்தாகாவ், சோனாபால், பாக்பேடா, கிதும்பேடா, சிர்பூர் ஆகிய கிராமங்களுக்காக, லக்மி பொட்டாய் சுகப்பிரசவத்தில் குழந்தை பெற்றதற்காகத் துதிப்போம். கடயர் சலாம், சோன்பத்தி, ரமேஷ் சலாம், லட்சுமண் சலாம் ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. தஸ்ரு பொட்டாய்**
**திருமதி. ஜெய்மதி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பாவ்டி, கோட்லி ஆகிய கிராமங்களுக்காக, ரஸாய் சலாமிற்கு சுகப்பிரசவம் கிடைத்ததற்காக, சுக்தேர் சலாம் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். லக்கன் சலாம் சுகம் பெற, மகளை இழந்த லட்சுமி மண்டாவிக்கு தேவன் ஆறுதல் தர, சாம்தேர்கச்லாம், ரோசோ குமிட்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, ஜெய்மதி பொட்டாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: செல்வி. கசினி துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மொடேங்கா, பல்னா, சிங்னார், பலோடா பூட்டான் சாதுகாவ், உடித்காவ் ஆகிய கிராமங்களுக்காக, பத்ரூ சலாம் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். சுன்கி–லட்சு குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சிங்நார், மொடேங்கா, பல்னா ஆகிய கிராமங்களில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய, ராம்தாய்க்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.தேசிராம் வட்டே**
**செப்டம்பர்-20** **திருமதி. ரானோ வட்டே**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட காராவாண்ட், மூஞ்மெட்டா, சிவ்னி, திம்நார், பல்போட்பாரா, ஜோட்டா பாரா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ராஜேஷ் பொட்டாய் ( 7 வருட பக்கவாத நோய்) நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. ஜக்நாத்குமிட்டி**
**திருமதி. சுக்கோ குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிடுகாபேடா, பரண்டா, கேராபட், ஜோட்டே, ஜெய்பூரி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட முகாய் நுரெட்டி, சுக்து போதா ஆகியோருக்காக, ராஜ்மன் குமிட்டி, சதாய் நுரெட்டி, ப்ரிஸ் துக்கா ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ரஸாய்க்கு சுகம் கிடைக்க, ராம்லால், ராம்பத்தி, ஷியாலால் குமிட்டி ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு.லட்சு கருங்கா**
**திருமதி. புல்தாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட போர்பால், கட்காகாவ், கொர்ரா, இருக்கோ, சீண்டுபாரா, ஈத்கஜா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட சுதோன், சந்தோஷி ஆகியோருக்காகத் துதிப்போம். ஸனோத்திக்கு சுகப்பிரசவம் கிடைக்க, மனோதிக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சன்னு துக்கா**
**திருமதி. மனிஷா துக்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்க்கபேடா, மூங்மேடா, காப்சி ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். மனோ முதுகு வலியிலிருந்து சுகம் பெற, ராசு வட்டே குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செப்டம்பர்-21**

**திரு. சுக்மன் பொட்டாய்**
**திருமதி. சுக்மி பொட்டாய்**
**செல்வி. ராம்தாய் குமிட்டி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட

மட்டாவாண்ட், நாராயண்பூர் ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். பிரிஸ்பதி, சுனித்தா துக்கா ஆகியோருக்கு சுகப்பிரசவம் கிடைக்க, லட்சுமண் குமிட்டிக்கு நிறைவான சுகம் கிடைக்க, புதிய ஆலயம் கட்டப்பட,நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட, சூசன்னா, சாமுவேல் ஆகியோர் நல்லமுறையில் படிக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. கோத்தாய் பொட்டாய்**
**செல்வி. பஜாரி கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வேத்மாகோட், மண்டோகி, மொரஸ்கோடா, பரஸ்காவ் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜெய்பதி, லால்து, சுக்லி, ரெய்னி, சுமித்ரா ஆகியோருக்காக, காம்தேவ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். சுமித்ரா (இரத்தக் குறைவு), லக்மு (மனநோய்), ஜம்னி, சுக்லி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, திஷ்சா விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. பஜ்நாத் சலாம்**
**திருமதி. சொனாரி சலாம்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குட்ரபாரா, ரேமாவாண்ட், பாத்ரூடண்ட் பாரா, பாத்ரூடண்ட் பாரா, சாந்தி நகர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மனோஜ் சலாம், ரேவதி ஆகியோருக்காக, சுக்தாய்க்கு கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ரேமாவாண்ட் கிராமத்தில் ஆராதனை நடத்த எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இரட்சிக்கப்பட, இத்வாரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, குமார்–ஈஸா தம்பதியருக்கு சமாதானம் கிடைக்க, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

செப்டம்பர்-22

**திருமதி. தன்பத்தி பொட்டாய்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கோகுடா, ரேமாவண்ட், நயானார் ஆகிய கிராமங்களுக்காக, சாந்தி வட்டேக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். கணவரை இழந்த சோமாரி துக்காவிற்கு தேவன் ஆறுதல் தர, குஷிக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சொகாய் கருங்கா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தேவ்காவ், கொகுடா, கோடுகாவ், பிரள்பட் ஆகிய கிராமங்களுக்காக, சோமோ, உஸே, ஹர்ஸ், சந்து மண்டாவி ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஜோதி, மங்கலு மண்டாவி, சுரேஷ், ராஜ் உசேண்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, சேது குடும்பத்தில் சமாதானம் கிடைக்க, சூசன்னா, ரம்யா ஆகியோருக்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லால்சாய் பொட்டாய்**
**திருமதி. சீத்தா பொட்டாய்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ரேணு சலாம், கோலேபாய், கெசியா, பசந்தி, லக்மூ, அனித்தா, மெய்னு, ரெய்சிங், சம்ரா ஆகியோருக்காகத் துதிப்போம். சம்ரா, கட்வா கொர்ரின், மஸ்சு உசேன்டி ஆகியோர் இரட்சிக்கப்பட, மெய்னிபாய் சுகம் பெற, சுக்தேவ் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மான்சிங் கச்லாம்**

செப்டம்பர்-23

**திருமதி. சுல்மதி கச்லாம்**

நற்செய்தி அறிக்கப்பட்ட கோங்லா, ஸாரா, முஸ்குடும், முண்டுபால், மட்மனார் ஆகிய கிராமங்களுக்காக, கோந்தாகூரில் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டதற்காக, சுக்தாஸ் பொட்டாய் ஆராதனையில் கலந்து கொள்வதற்காகத் துதிப்போம். மங்து உய்கே, சீதாராம் உய்கே, சூரஜ் உய்கே, டயீஸ்டர் உய்கே, ரூப்சாய் சலாம், மோட்டா காவ்டே ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. சந்துராம் வட்டே**
**திருமதி. சுகோந்தின்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கங்கால், கர்மாரி, தாடோநார் ஆகிய பகுதிகளுக்காக, ஜக்தேர் கோட்டா–கில்மி தம்பதியருக்கு 5 வருடங்கள் கழித்து குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். சுப்பிரீத் வட்டேவிற்கு ஏற்ற வேளையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட, நற்செய்தி கேட்டவர்கள்

இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜார்கண்ட் மாநிலம்**

**அருட்பணியாளர்: திரு. குந்தர் பகெல்**
**திருமதி. மம்தா பகெல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மாங்கை, பல்ராம்பூர், டால்டோன் கன்ச், சந்தாவா, லாம்பி, டாடாபானி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட லோககிங், மைனாதேவி, சீதல்பட்டி தேவி, பிரியா குமாரி, சந்தன்சிங், விகாஷ்சிங், கிருஷ்ணா கிஷான் ஆகியோருக்காக, ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ள 3 பேருக்காக, கரண் சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். மாஜி, கோ்வார், புய்யார், குப்தா, ஓரண், பிளாக்ஸ்மித் ஆகிய இன மக்கள் நற்செய்தியால் சந்திக்கப்பட, ஆலயக்கட்டுமானத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-24**

**அருட்பணியாளர்: திரு. மங்கள் மராண்டி**
**திருமதி. சுகாஜினி சௌரேன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட லப்தா காடி, ஜர்ஜுடி, காட்பாந்தா, கில்ஹா, பாதேலா, சோட்டாபோக்ரிய்யா, ஜாகேஷ்வர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜோகேஷ் முர்மு, ஸாயீமன் மராண்டி, நிஸ்பேட்டர் மராண்டி, கோப்னா முர்மு ஆகியோருக்காக, ஜாகேஷ்வர் கிராமத்தில் ஜெபக்குழு நடைபெறுவதற்காக, டேத்மாய் முர்மு, தலாமய் முர்மு ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். ஜாகேஷ்வர், தோக்பகாடி, ஜோட்டா, போக்ரிய்யா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட, சேத் கெம்பரோம், டேனா ஹாஸ்தா, ஸாயின் முர்மு ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**உத்தரப்பிரதேசம்**

**(அவாதி, மிஸ்ரா, ராஜ்புத், கௌதம், தாக்கூர், சௌகான், சௌத்ரி–ஆகிய மக்கள் கூட்டத்தினர்)**

**அருட்பணியாளர்: திரு. ராம்ஜியவான்**
**திருமதி. ராஜ்லட்சுமி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பிஸ்வா, இஸ்பாபூர், மதன்பூர், மெய்பத்பூர், சரெய்யா, மூரத்பூர், ஜம்பா, பூடான்பூர், பிஜென்டா, படாய்பூர், கங்காபூர், மடியாவா, ஜான்பூர், கினோத்தி ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட மோனிகா, முன்சி, பாலா, சோனு, ஆயூஷ், தீப்பு, விஸ்வநாத், கௌசல்யா, ராம்சாகர், திவ்யா, சுனேனா, விகாஷ், அஞ்சலி, ஈஷா, விஷால், கிரண், சங்கீதா தேவி, ஷியாராம், கம்லாதேவி, ராஜேந்தர், மகேந்தர், அனுஷ், அபி ஆகியோருக்காக, நீலம், குஷ்பு ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக, ரித்தேஷ், குடானா, ரோகித், பாயல் ஆகியோருக்குக் கிடைத்த சுகத்திற்காகத் துதிப்போம். முன்னி (காது நோய்), சுபா (கர்ப்பப்பை நோய்), விஸ்வநாத் (முதுகுதண்டுவட நோய்), மது, அனுப்பம் (கல்லீரல் நோய்), ராஜலட்சுமி ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, கௌசல்யா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. மிதிலேஷ்குமார்**
**திருமதி. சுனித்தா தேவி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பக்கரியாஹா், மூடா, சுத்தரி, குச்சல்ஹா, ஹரெய்யா, லங்கடிபூர், ஹசரியா, கோலா, காவேல்பூர், மாட்டாபூர்வா, மஜ்ரா, சிரெய்ஜா, சுர்ஜி பூர்வா, கூஷ்மௌரி, திங்கூர் பூர்வா, மாணிக்பூர் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜக்தீஷ், சுமன், முஸ்கான், முல்லு, ஆயின், ராஜ்குமார், மணிஷா, அசோக், பங்கஜ், அனிகேத், கீர்த்தி, சௌளேந்தி, சாந்தி, ஷீமா, ராம்பிரசாத், சுமித், ஆர்த்தி, அனாயா, விஜ்வலி, பக்வதி, முகேஷ், ராம்தேவி, சிவானி ஆகியோருக்காக, ஷீமா, மணிஷா, சர்பேஷ்குமார் ஆகியோர் திருமுழுக்கு பெற்றதற்காக, பால்கராம், தன்மய் ஆகியோருக்கு சுகம் கிடைத்ததற்காக, ஓம்வதிக்கு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காகத் துதிப்போம். ராம்பால் (பக்கவாதம்), பூஜ்வலி (இடுப்பு எலும்பு முறிவு), ராம் கிஷோர் (சிறுநீரகக்கல் அடைப்பு) ஆகியோருக்கு நிறைவான சுகம் கிடைக்க, திலக்ராம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஆந்திரா மாநிலம் (தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**
**திரு. வெங்கடேஸ்வரலு**
**திருமதி. கடம் புஷ்பம் குமாரி**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட

டொட்லவாரமிட்டா, நாயுடுபேட்டா, கானூரு ஆகிய கிராமங்களுக்காக, பபுலு, தீனா தயாள், ரமனையா ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்வதற்காக, சாய் வீட்டில் ஜெபக்கூடுகை நடைபெற்றதற்காகத் துதிப்போம். நாயுடுபேட்டாவில் உள்ள தேவாலயத்திற்கு தேவையான இடம் மற்றும் கட்டிட கட்டுமான பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட, ஜெஸ்ஸிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, ஸ்ரவானிக்கு சுகப்பிரசவம் கிடைக்க, இந்தி பேசும் மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட, பவனின் எதிர்கால வாழ்க்கைக்காக, புஷ்பாவுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செப்டம்பர்-25**

**திரு. பால் வீரமணி**
**திருமதி. பெல்சியா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கானூரு சென்டர், செங்காரெட்டி கன்ரிகா, பூபாய் காலனி, நாயுடுபேட்டா ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, ரமணையா, பாஸ்கர், ஷாஷா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, கடந்த நாட்களில் நடைபெற்ற பணித்தள ஆய்வுகளுக்காகத் துதிப்போம். ஜுவல்லபாளம், தாள்வாய்ப்பாடு, செங்காரெட்டி, கன்ரிகா ஆகிய பகுதிகளில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசல் கிடைக்க, வாசு மனநோயிலிருந்து சுகம் பெற, ரமணையா, விஜயகுமார், சிரஞ்சீவி, சுஜித் ஆகியோர் இரட்சிக்கப்பட, ஊழியரின் மனைவிக்கு சுகப்பிரசவம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திரு. உதய்குமார்**
**திருமதி. பிரசன்னா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடரெட்டி காலனி, சிந்தாரெட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்காக, பிரசாந்த், ராஜய்யா குடும்பம், கெஜியா, விஜய் குடும்பம் ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். தெரு நற்செய்தி மற்றும் தனிப்பட்ட முறையில் நற்செய்தி அறிவிக்கப்பட, இஸ்ரேலுக்கு நிறைவான சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. பத்தலா மதுசுதாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெரிமிடி, துவாரகாபுரம் ஆகிய கிராமங்களுக்காக, சித்தையா, வாசு, விஜயம்மா, ரவி, சாரதா, சுப்புராயுடு, சரஸ்வதி ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக, எப்சிபா விசுவாசத்தில் வளருவதற்காகத் துதிப்போம். லட்சுமி தேவிக்கு அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற, சபைக்கு மின் இணைப்பு கிடைக்க ஜெபிப்போம்.

**கர்நாடக மாநிலம் - தேவனஹள்ளி(தென்னிந்தியா)**

**அருட்பணியாளர்:**

**திரு. சாமுவேல் பிரபாகர்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட வெங்கடப்பூர், தர்பனஹள்ளி, ஹோட்டேஹள்ளி ஆகிய கிராமங்களுக்காக, நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோளதேவனஹள்ளி, குபம்ரஹள்ளி, பாஹேபள்ளி ஆகிய கிராமங்களுக்காக, ரவி, ராதா, ஸ்ரீதர் குடும்பம், பிரகாஷ், கீதா ஆகியோருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காகத் துதிப்போம். பிரகாஷ் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-26**

**ஒடிசா**

**அருட்பணியாளர்: திரு. டேனியல் சாந்தா**
**திருமதி. புலிமி சாந்தா**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட குமுடகுடா, ஒச்சன் குடா, காசிகுடா, பேலாபுட்,

மாட்டிக்கல் ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ராமோ, நாரன், கோபி, நந்தோ, லுக்கே, ரீத்தா, நீலசோ ஆகியோருக்காக, குச்சன்குடாவில் ஜெபக்குழு நடைபெறுவதற்காக, நீந்தி, பார்வதி ஆகியோருக்கு கிடைத்த சுகத்திற்காக, லாசு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். கேத்து சௌந்தா, தன்பத்தி சௌந்தா ஆகியோர் இரட்சிக்கப்பட, ஒச்சல்குடாவில் மீண்டும் ஊழியங்கள் நடைபெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. அப்பொல் மண்டல்**
**திருமதி. சுமித்ரா மண்டல்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிலிடோங்கிரி, கோன்ஷாப் பாரா, துமர்திகி, பரசுண்டி, தொட்ரபாரா ஆகிய கிராமங்களுக்காக, புதிதாக நற்செய்தி கேட்ட ஜெய்சிங், விஜய்லால், சபீத்தா, ருக்மணி, ஜெய்த்மோகன், சந்தோஷி, ரப்பி, ஜோமோன், ராகுல், கணேஷ், மோகன், வீணா, புருனோ, ஜெகநாத், தஸ்ரத், விமல், சங்கீதா, பிதோந்தி, பித்து, சுக்மோன், ரம்ஸா, துக்கபாய், சாவித்ரி, ரோஷ்ணி, ரத்தன் ஆகியோருக்காக, ரெபேக்கா சுகம் பெற்றதற்காக, ரஷ்மி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதற்காகத் துதிப்போம். துமர்டிகி கிராமத்தில் ஆராதனை நடைபெறுவதற்கான உள்ள தடைகள் விலக, ஆராதனை நடைபெற இடம் கிடைக்க ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்: திருமதி. ஜானகி மாஜி**
**திரு. லெலன்–திருமதி.பிரிட்டி லெலன்**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சிமிலி குடா, பாப்லி, கபித்தா, நாகூல், மான்பார், குமரகுடா, பனுவா குடா ஆகிய கிராமங்களுக்காகத் துதிப்போம். ராஜ்மணிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க, சாம்லேஷ்வரிக்கு நிறைவான சுகம் கிடைக்க, மதனுக்கு கண்பார்வை கிடைக்க ஜெபிப்போம்.

**குக்கி அருட்பணியாளர்கள்**
**(வடகிழக்கு மாநிலங்கள்)**

**அருட்பணியாளர்: திரு. நபின் நர்ஜினரி**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அலுபாரி, சிவாஜி நகர், லோஹித்பூர், பயா, மேகய்லியங், கோரலியங், டாப்ரஹான், தெல்லுலியங், பயன், 20ஆவது மைல் ஆகிய பகுதிகளுக்காக, சஹில் சிபா இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, ஊழியரின் மகளுக்கு கல்லூரியில் இடம் கிடைத்ததற்காகத் துதிப்போம். பிரேமா நோர்பு கோய்பா மனநோயிலிருந்து சுகம் பெற, ரிட்டா பரிஹர் சுகம் பெற ஜெபிப்போம்.

**செப்டம்பர்-27**

**அருட்பணியாளர்:**

**திரு. தங்காலுன் கிப்கின் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ருகாசன், மோலன், அமராஞ்சன், வோம்லி, ஜவ்ஜங், எக்ரானி, ஷுகஞ்சன் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். பல்வேறு கொள்கைக் குழப்பங்கள் நிறைந்த இடத்தில் விசுவாசிகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஆபிரகாம் தௌதாங்**
**(மேற்கு வங்கம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட தெபித்ங்கா, பாபுபாஷா, சில்வர் டேல், சிஆர்பிஎப் குடியிருப்பு, சிவ்மந்திர் ஆகிய பகுதிகளுக்காக, வீட்டுக்கூட்டம், உபவாசக்கூட்டம் ஆகியவை நடைபெறுவதற்காக, விடுதி மாணவர்களின் பெற்றோர் ஆராதனையில் கலந்து கொள்ள ஆரம்பித்ததற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹெம்ஹோசன் ஹோகிப்**
**(அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட பெகுலியங், கெப்ருலியங், ஹடிதுபா, யய்லிங் ஆகிய பகுதிகளுக்காக, அர்ஜுன் காம்ப்ரே மீண்டும் ஆராதனையில் கலந்து கொண்டதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-28**

**அருட்பணியாளர்:**

**திரு. இங்காம்போ ஹோகிப் (அஸ்ஸாம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட அம்ரஜன், கர்பி, ஆங்லாங் ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம்,

குடும்பக் கூட்டம் ஆகியவை நடைபெற்றதற்காக, குக்கி, கர்பி, கச்சாரி ஆகிய இனக்குழுக்கள் நடுவில் நற்செய்தி அறிவிக்கும் பணி நடைபெற்றதற்காகத் துதிப்போம். பள்ளி நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற, மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்காக, ஆசிரியர்கள் சிறப்பான முறையில் கற்றுக் கொடுக்க, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒருமனதோடு செயல்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோதாங் ஹோகிப் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட சோம், மேல் மாங்மோ, டென்டம் மருத்துவமனை ஆகிய பகுதிகளுக்காக, ரமேஷ் ராய் இயேசுவை ஏற்றுக் கொண்டதற்காக, 4 சீடர்கள் உருவாக்கப்பட்டதற்காக, 2 வீட்டுக் கூட்டங்கள் நடைபெறுவதற்காகத் துதிப்போம்., டென்டாமில் ஆலயம் கட்டப்பட– தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. சத்யாபாஸி மோல்சம் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட எம்புருட் சேரா, கமலா சேரா, மேகஸின், ஹவாய்பாரி ஆகிய பகுதிகளுக்காக, உபவாச ஜெபம், குடும்பக் கூட்டம், தம்பதியர் ஆலோசனை ஆகியவை நடைபெற்றதற்காக, ஊழியர் குடும்பமாக சுகம் பெற்றதற்காகத் துதிப்போம். கலாசாரியில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**செப்டம்பர்-29**

**அருட்பணியாளர்:**

**திரு. செய்கோலன் குய்டி (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நெய்லஹா, டான்சாரா, எம்புருட் சேரா, பங்க்ஜங்க், கெய்கன், ஜாவ்காவ், லாங்ஜோல், முன்பி ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். எம்புருட்சேராவில் நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. லென்ஹோகோ ஹோகிப் (திரிபுரா)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட ஜாவ்ல்காவ், ஸ்ரீலங்கா, சால்டாசெரா, எம்புருட் சேரா, டான்சாரா ஆகிய பகுதிகளுக்காக, நேகா மோல்சம் பாடுகளின் நடுவிலும் கிறிஸ்துவில் வளருவதற்காகத் துதிப்போம். நிர்ஜரா மோல்சம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. செய்மிங்தங் கிப்கின் (மணிப்பூர்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட கேம்ங்காய், காங்குய், கேமிங்பாய், ஹோலப், பைஜிங், மோங்தங், கங்க்போக்பி, ஹோலிஜங் ஆகிய பகுதிகளுக்காகத் துதிப்போம். மணிப்பூர் அகதிகள் முகாமிலுள்ளவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஜெபிப்போம்.

**செப்டம்பர்-30**

**அருட்பணியாளர்:**

**திரு. ஸ்டீபன் லுங்கோஜின் (சிக்கிம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட மார்டம், மேற்கு சிக்கிம் ஆகிய பகுதிகளுக்காக, மாற்றுத்திறனாளி அனுகிரஹாஹ் தனது வாழ்வின் மூலம் இயேசுவை வெளிப்படுத்துவதற்காகத் துதிப்போம். நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**செல்வி. லிங்னெய்கிம் (அருணாச்சல பிரதேசம்)**

புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்ட கோபிதா புமிஸ் ஆகியோர் ஆராதனை நடத்த ஆரம்பித்ததற்காகத் துதிப்போம். விடுதி காப்பாளருக்கு வீடு கட்டப்பட, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**அருட்பணியாளர்:**

**திரு. ஹோலன்லால் கிப்கின் (அருணாச்சல பிரதேசம்)**

நற்செய்தி அறிவிக்கப்பட்ட நியூ மேகலியங், சிவாஜி நகர், ஜெலக் பாரி, பயஹாம், தங்லத், ஹஜுஹாம் ஆகிய பகுதிகளுக்காக, ஊழியர் குடும்பம், மரிசாய் தன்ஜி, கடிசே மன்யு ஆகியோர் சுகம் பெற்று வருவதற்காகத் துதிப்போம். மேகப்சோ மன்யு, பெல்லாய் ஆகியோர் புற்று நோயிலிருந்து நிறைவான சுகம் பெற, நற்செய்தி கேட்டவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.




# நம்பிக்கை நாயகிகள்

திருமதி. ஜெஸி பொன்னுராஜ்

கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட பெண்கள் பலவிதங்களில் செயல்படுகிறவர்களாக மாத்திரமல்ல, வெற்றியாளர்களாகவும், நம்பிக்கை நாயகிகளாகவும் திகழ்கிறார்கள். எபேசியர்:4:2இல் கூறியுள்ளபடி “மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, தன் குடும்பத்தை, திருச்சபையை, அருட்பணியைக் கட்டுபவர்களாக இருப்பதைக் காண்கிறோம்.



**உற்சாகமளிக்கும் பெண்கள்:** ஒருநாள் நத்தானியேல் என்னும் ஒருவர் மனமுடைந்து மாலை நேரம் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார். தான் வேலையிலிருந்து நீக்கப்பட்ட செய்தியை, தன் மனைவியிடம் எப்படிக் கூறுவது, என்ற கேள்வியோடு வீடு வந்து சேர்ந்தார். இனி என்ன செய்வது என்ற சோகமும், குழப்பமும் அவரது முகத்தில் தெரிந்தது. அதைப் பார்த்த அவரது மனைவி என்னாச்சு? என்பது போல அவரை நோக்கினார். அவர் எந்தப் பதிலுமே சொல்லவில்லை.

சிறிய மவுனம். அதன்பின் என்ன நடந்தது? என்று கேட்டார். அதற்கு அவரது கணவன் தயங்கித் தயங்கி தான் வேலையிலிருந்து நீக்கப்பட்ட விவரத்தை கூறினார். அந்த வார்த்தையை கேட்டதுமே அவரது மனைவி பலமாக சிரித்தார். அதைப்பார்த்த அவரது கணவனுக்கு குழப்பமானது. நாம் கூறிய அதிர்ச்சியான செய்தியால், ஒருவேளை பைத்தியம் ஏதாவது பிடித்து விட்டதா? என்ற கலக்கத்தோடு அவளது முகத்தைப் பார்த்தார்.

நிலைமையின் தீவிரம் உணர்ந்த அவரது மனைவி, நீங்கள் உங்களுடைய வேலையிலிருந்து நீக்கப்பட்டதற்காக அதிகமாக கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் இனிமேல், உங்கள் விருப்பம் போல, புத்தகங்கள் எழுதலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை என்றார். அதெல்லாம் சரிதான், ஆனால், இனிமேல் மாதா மாதம் சம்பளம் வராதே. வீட்டுச் செலவுக்கு என்ன செய்வது, எப்படி சமாளிப்பது என்று கவலைப்பட்டார்.

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். கூப்பிடுகிற காகத்தின் குஞ்சுக்கும், உணவளிக்கிற கடவுள் நம்மோடிருக்கிறார். நீங்கள் என்னிடம் செலவுக்குக் கொடுத்த பணத்தில் நான் சிறுகச் சிறுக சேமித்து வைத்திருக்கிறேன். அந்தப் பணம் நமது ஒரு வருட செலவுக்குப் போதுமானது எனக்கூறி, வீட்டிற்குள் சென்று, அந்தப் பணத்தை எடுத்து வந்து கொடுத்தார்.

அதைப் பார்த்தவுடன்தான் அவரது கணவனுக்கு சற்று நிம்மதி கிடைத்தது. எந்தவொரு விபரத்தையும் சுவைபட எழுதும் திறமையை கடவுள் உங்களுக்குத் தந்திருக்கிறார். இதுவரை வேலையின் மீது

உங்கள் கவனமிருந்ததால், உங்கள் திறமையைப் பயன்படுத்த முடியவில்லை. இது, கடவுள் உங்களுக்கு அளித்திருக்கும் நல்ல வாய்ப்பு. நிச்சயம் ஒரு அற்தமான புத்தகத்தை உங்களால் எழுத முடியும் என்று நான் நம்புகிறேன் என்றார்.

அதே போல, அவரது கணவர் பின்னாளில் மிகப்பெரிய எழுத்தாளராக எல்லோராலும் அறியப்பட்டார். அந்த மாபெரும் எழுத்தாளர்-அதாவது அந்த மனைவியின் கணவர் யார் தெரியுமா? அவர்தான் தி ஸ்கார்லெட் லெட்டர் என்ற மாபெரும் காவியத்தை படைத்த நத்தானியேல் ஹாவ்தோன் என்பவராவார்.

அவரது மனைவி கடவுள் மேலும், தன் கணவரின் திறமை மீதும் நம்பிக்கை வைத்தார். அவருடைய உற்சாகமான வார்த்தைகள் அவரை மிகப்பெரிய எழுத்தாளராக மாற்றியது. மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்கிறான் என்றும் புத்தியுள்ள ஸ்திரி தன் வீட்டைக் கட்டுகிறாள் என்றும் கடவுள் பெண்களின் குணாதிசயத்தைப் பற்றி மிக உயர்வாகக் கூறியிருக்கிறார்.

**மாற்றத்தை உருவாக்கும் பெண்கள்:** பெண்களை ஒரு உணர்வுள்ள மனித இனம் என்று மதிப்பளிக்காத அந்தக் காலத்திலேயே, மிகத் துணிச்சலாக, நம்பிக்கை நாயகியாக, உலக மீட்பரை தன் கருவில் சுமக்கத் தயாரானார் மரியாள். ஐந்து அப்பம் இரண்டு மீன்களை 'ஐயாயிரம் புருஷர்' சாப்பிட்டது போக என்று ஆண்களை மட்டுமே கூறிய அந்தக் காலக்கட்டத்தில்தான், பெண்களும் இயேசு கிறிஸ்துவுக்கு சீடர்களாக இருந்தனர். இந்தப் பெரிய சமூக மாற்றத்தைத் தொடங்கி வைத்தார் நமது மீட்பர்.

வீட்டிலும் சரி, வெளியிலும் சரி, ஆலயப்பணிகளிலும் சரி, அருட்பணிகளிலும் சரி பெண்களின் பங்கு என்பது மிகச்சிறந்த ஒன்றாகும். கடவுளின் சித்தம் செய்யும் சாதாரண மக்களை அசாதாரண மக்களாக மாற்றும் சர்வல்லமையுள்ள கடவுள், பெலவீன பாண்டங்களாகிய பெண்களை மனவலிமை படைத்தவர்களாக உருவாக்கி, தனது அருட்பணியில் பயன்படுத்துகிறார்.

யூதித்து தனது மானம் மரியாதை பற்றி கவலைப்படாமல், கடவுள் சார்பாக செயல்பட்டபோது, மிகப்பெரிய பேரரசை வீழ்த்தினாள். எஸ்தர், தனி ஒரு ஆளாக; தன் உயிரைப் பற்றி கவலைப்படாமல்; அரசரைப் பார்க்கச்சென்று; தன் இனத்தைக் காப்பாற்றினாள். யாகேல், இஸ்ரேலுக்கு சத்துருவாயிருந்த சிசேராவை கூடார ஆணியால் அடித்துப் போட்டாள். வீரம், அமைதி, புத்திசாலித்தனம், அதே சமயம் ஆரவாரமில்லாமல் அறைகூவல் விடுக்கும் பணிகளை செய்து முடிப்பது என்று பெண்களைக் கொண்டு கடவுள் ஆற்றிய பணிகள் ஏராளம்!

ஈக்வடார் நாட்டிலுள்ள ஆக்கா இந்தியர்களுக்கு, நற்செய்தி அறிவிக்க சென்று இரத்த சாட்சிகளாக மரித்த ஜிம் எலியட் குழுவினரது மனைவிகள் மீண்டும் தங்கள் கணவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்த அதே ஆக்கா இந்தியர்களுக்கு நற்செய்தி அறிவிக்க தைரியமாகப் புறப்பட்டு சென்றனர். விளைவு ஜிம் எலியட்டை கொன்ற மனிதன் இயேசுவை ஏற்றுக் கொண்டு, அருட்பணியாளராகி, ஜிம் எலியட்டின் மகனுக்கே திருமுழுக்கு கொடுத்தார்.

பெண்கள் பலவீனமானவர்கள் என்று கூறியே பலவீனப்படுத்தப் பட்டிருக்கிறோம். நாம் கடவுள் விருப்பத்தை செய்யத் துணியும்போது, கடவுள் தமது பரிசுத்த ஆவியின் பெலத்தால் நம்மை நிறைத்து, புதிய சகாப்தம் படைக்க ஆவலாயிருக்கிறார். வரலாற்றின் இன்றியமையாத நேரங்களில் பெண்கள் தங்களுடைய பங்கை சரியாகச் செய்ததினால், அருட்பணி தொய்வின்றி நடைபெற்று வருகிறது. நமது கரங்களை பலப்படுத்துவோம். மீண்டும் எழுவோம் புதிய பெலத்தோடு!

புதிய வரலாறு படைக்க
பெண்களை கடவுள் அழைக்கிறார்.
வாருங்கள் வரலாறு படைப்போம்.



வேதாகமத்தின் பக்கங்களிலே "அருட்பணி" 10

# மவுனமாயிருக்காதே எழுந்து கட்ட வா !

Dr.N.J. ஞானையா

ஜான், ஒரு பாட்டிற்கு விசில் அடித்தவாறே உற்சாகமாக நடந்து வருகிறார்.

**மாணிக்கம்**: என்ன ஜான் ! உற்சாகமான விசில்! என்ன பாட்டு அது ?

**ஜான்:** இன்று யுடியூபில் திரும்பவும் கேட்டேன். நமக்கு நன்றாய்த் தெரிந்த பாடல்தான்–"இது சிந்திக்கும் காலம்– செயல்படும் நேரம் – மவுனமாயிருக்காதே"!

**மாணிக்கம்**: அது ஒரு மிஷனரி அறைகூவல் விடுக்கும் பாட்டாச்சே. அந்தப்பாடலைக் கேட்கும் போதும், பாடும்போது அறைகூவல் கொடுக்கும் நல்ல பாட்டு அது. ஆசிரியர் சாலமோன் வரும்வரை அதைப் பாடலாமே !

**ஜான்:** நல்ல யோசனை !

(இருவரும் உற்சாகமாகப் பாடுகின்றனர் – ஆசிரியரும் வருகிறார்)

**சாலமோன்:** என்ன தம்பிகளா – ஒரே பாட்டு வரவேற்பாக இருக்கு! அதிலும் அருமையான "அருட்பணி அறைகூவல் பாட்டு"! பழைய ஏற்பாட்டில் வருகின்ற அருட்பணிக் குறிப்புக்களையே இப்போது நாம் பேசிவருகிறோம். இன்று அந்தப்பாட்டின் மூலமே நமது உரையாடலையும் தொடங்கலாம்.

**ஜான்:** சார், நீங்க கொடுத்த "மிஷனரிப்பணி அழைக்கிறது" என்ற நூலில் ஒரு கட்டுரை இது பற்றி மிக அழகாக வருகிறது. எஸ்தர் 4:14 இல் நாம் வாசிக்கும் "நீ இந்தக்காலத்தில் மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச் சொன்னான்" என்னும் வசனத்தின் அடிப்படையில் அமைந்தது.



**மாணிக்கம்**: அது எனக்கும் பிடித்தமான ஒரு கட்டுரை. மொர்தேகாய் எஸ்தருக்கு விடுத்த மூன்று வகை அறைகூவல்கள் !

**சாலமோன்:** நான் அந்தப் புத்தகத்தைப் படித்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கொஞ்சம் மறந்துவிட்டது. மாணிக்கம், அந்த மூன்று அறைகூவல்கள் என்ன என்று கூறுவாயா ?

**மாணிக்கம்**: கண்டிப்பாக. முதலாவது அது காலத்தின் அறைகூவல் (Challenge of the time) – ஓர் அவசர சூழ் நிலை; செயல்படவேண்டிய காலம். இரண்டாவதாக அது கடமையின் அறைகூவல் ( Challenge of duty) – எஸ்தர் ஒரு யூதப்பெண் – அவளுடைய மக்கள் அழியப்போகிறார்கள்;

அதைத் தடுத்து நிறுத்தவேண்டியது அவள் கடமை. மூன்றாவதாக, அது காரியத்தின் அறைகூவல் அல்லது செயல்படவேண்டிய அறைகூவல் (Challenge of taking action)! அந்த நூலின் ஆசிரியர் அந்த மூன்றாவது அறைகூவலுக்குப்பின் எழுதிய வரிகளும் மறக்க முடியாதவை!

**சாலமோன்:** அவை என்ன ?

**மாணிக்கம்**: "முதலாவதாக எஸ்தர் உபவாசத்துடன் ஜெபிக்கிறாள். பின்னர் அழகானதொரு திட்டமிடுகிறாள் மூன்றாவதாகப் பணிந்தும், துணிந்தும் அத்திட்டத்தைச் செயல்படுத்துகிறாள். மவுனம் பறந்துவிட்டது. செயல்படுதல் பிறந்துவிட்டது"

**சாலமோன்:** மிக அருமையான வரிகள்; மவுனம் பறந்துவிட்டது; செயல்படுதல் பிறந்து விட்டது.

**ஜான்:** எனக்கும் அவை மிகவும் பிடிக்கும். அதை எழுதிய ஆசிரியரே எஸ்தரைப்பற்றி " இது சிந்திக்கும் காலம் செயல்படும் நேரம்" என்னும் மற்றொரு நூலும் எழுதியுள்ளார். அதில் வரும் ஒரு அதிகாரத்தின் தலைப்பு "ஜெபம் – வீரம் – ஞானம்" என்பது. எப்படி எஸ்தர் ஜெபத்தோடும், வீரத்தோடும், ஞானத்தோடும் செயல்பட்டாள் என்பதை அழகாகக் கூறும் அதிகாரம்.

**சாலமோன்:** தம்பிகளே ! உங்களுடைய புத்தகம் படிக்கும் ஆர்வம் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தருகிறது. நல்ல தலைவர்களாக வருவீர்கள். Leaders are the Readers! என்று கூறுவார்கள். இன்று மற்றொரு நூலை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்.

**இருவரும்**: அது என்ன நூல்?

**சாலமோன்:** "எழுந்து கட்ட வா" என்ற நூல். பழைய ஏற்பாட்டில் வரும் நெகேமியாவின் வாழ்க்கை வரலாற்றை அவரே சொல்லுவதுபோல ஒரு சுயசரிதைப் பாணியில் அமைந்த நூல். முன்பு நான் கொடுத்த "ஆசீர்வதிப்பேன் வா" என்னும் ஆபிரகாமின் சுயசரிதை (தன்வரலாறு கூறல்) முறையில் அமைந்தது.



**ஜான்:** நெகேமியாவின் வாழ்க்கை ஓர் அற்புதமான வாழ்க்கை. அந்த நூலில் உங்களுக்குப் பிடித்தமானவற்றைக் கூறுங்களேன்.

**சாலமோன்:** அது ஒரு சுயசரிதை நூலாக இருந்தாலும் பின் இணைப்பாக "நெகேமியா கற்றுத்தரும் பாடங்கள்" என்ற தலைப்பில் 10 குறிப்புக்களை அந்த ஆசிரியர் எடுத்துச் சொல்லுகிறார். அவை எனக்கு மிகவும் பிடித்தன.

**மாணிக்கம்**: அந்தத் தலைப்புக்களை மட்டும் இன்று சொல்லுங்கள். நாங்கள் பின்னர் அந்தப் புத்தகத்திலே அவற்றின் விளக்கவுரைகளை வாசித்துக்கொள்ளுகிறோம்.

**சாலமோன்:** இவைதான் அந்த 10

தலைப்புக்கள். அவற்றை மட்டும் வாசிக்கிறேன். ஓர் அருட்பணியாளனுக்குத் தேவையானவை அவை என்றும் நாம் கூறலாம்.

1. கரிசனையும் தரிசனமும் (ஈடுபாடுகொள்ள விரும்பும் தரிசனம்).

2.துணிவான திட்டங்கள் – பணிவான ஜெபங்கள்.

3.ஊக்கப்படுத்தும், ஒன்றுபடுத்தும் தலைவர்.

4. கருமமே கண்ணான கடின உழைப்பு.

5.எதிரிகளைச் சமாளிக்கும் தலைவர்.

6.குறைகளை நிறைவாக்கும் முறைகள்.

7 முன் மாதிரி வாழ்வு; 8.புதுப்பித்தலும் எழுப்புதலும்.

9.அறிக்கையிடுதலும் ஆற்றல் பெருதலும்.

10. இறுதிவரை உறுதியாக வாழ்தல்.

**ஜான்:** "கருமமே கண்ணாயினார்" என்ற சொற்றொடரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது எப்படி பயன்படுத்தப்படுகிறது என்று தெரியாது. கருமம் என்பதன் பொருளும் விளங்கவில்லை.

**சாலமோன்:** கருமம் என்பது செயல்படுதல் என்பதைக் குறிக்கும். இந்த கருமமே கண்ணாயினார் என்பது தமிழ் இலக்கியத்தில் குமர குருபரர் எழுதிய "நீதி நெறி விளக்கம்" என்னும் நூலில் வரும் ஒரு செய்யுள் ஆகும்.

**மாணிக்கம்:** அது என்ன செய்யுள் ?

**சாலமோன்:**

“மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்
கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் –
செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்பும்
கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

அதன் பொருள் (அர்த்தம்): தாம் மேற்கொண்ட ஒரு செயலை (காரியத்தை) செய்து முடிப்பதிலே ஊக்கமுடையவர்கள் தாம் அடையும் உடல் துன்பத்தைப் பார்க்கமாட்டார்கள். பசியைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்; அச்செயலையே நினைத்துக்கொண்டிருப்பதால் சரியாக தூங்கக்கூட மாட்டார்கள். பிறர் செய்யும் தீமையையும் பொருட்படுத்தமாட்டார்கள். அவசரமும் படமாட்டார்கள். பிறர் தம்மை அவமதித்தாலும் பொருட்படுத்தமாட்டார்கள்.

**ஜான்:** இவை யாவையும் அன்று எஸ்தருக்கும், நெகேமியாவுக்கும் இருந்தன. நமக்குத் தெரிந்த பல அருட்பணியாளர்களுக்கும் இருந்தன.

**சாலமோன்:** ஆம், ஜான். மாணிக்கம். நேரம் ஆகிறது. அடுத்தவாரம் சந்திப்போம். வணக்கம்.

அடுத்த மாதமும் தொடருவோம்...

## வாழ்த்தி வரவேற்கிறோம்

மத்தியப்பிரதேசத்திலுள்ள மாண்ட்லா மாவட்டத்திலுள்ள பைகா (Baiga) பழங்குடியின மக்கள் நடுவில் இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் தனது ஊழிய எல்லையை விரிவாக்கியுள்ளது. இங்கு அருட்பணியாற்றும் **திரு. சந்தோஷ்குமார் பகேல், திரு. கமல்சிங் மனோடியா, திரு. தனுரா டோங்ரியா** ஆகியோரையும், ஆந்திராவில் அருட்பணியாற்ற புதிதாக இணைந்துள்ள **திரு. எனிபெரா பவனையும்** அன்புடன் வாழ்த்தி வரவேற்கிறோம். இவர்கள் மூலமாக ஆத்தும அறுவடையை தேவன் தர, இவர்களுக்காக ஜெபியுங்கள்.




# ஊழியம் செய்ய அழைப்பு தேவையா?

திரு. சந்தோஷ் கணேசன்

என்னுடைய கல்லூரி நாட்களிலும் தற்போதும் கிறிஸ்தவ நண்பர்களான சிலரிடம் பேசும்போது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டால், நான் வேலைப் பார்க்கப் போகிறேன், ஒருவேளை ஆண்டவர் என்னை ஊழியத்திற்கு அழைத்தால் ஊழியம் செய்வேன் இல்லையென்றால் வேலைப் பார்த்துக்கொண்டு வரும் சம்பளத்தில் ஊழியத்திற்கு கொடுப்பேன், அதுவே போதும் என்பார்கள்.

அதுவும் போதகர்களின் பிள்ளைகளாக இருந்தால், என் பெற்றோர் அனுபவித்த கஷ்டங்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அதனால், ஊழியம் நமக்கு சரிவராது, என்று சொல்வார்கள். இன்னும் சிலர் தனக்கு "ஊழிய அழைப்பு இல்லை" என்று சொல்லிவிட்டு, வாழ்நாள் முழுவதும் ஊழியமே செய்யாமல் நான் ஊழியத்திற்காக ஜெபிக்கிறேன் என்று சொல்லிவிடுவார்கள்.

உண்மையாகவே, ஆண்டவருடைய அருட்பணியை/ ஊழியத்தை செய்வதற்கு அழைப்புத் தேவையா? ஊழிய அழைப்பிற்காக நாம் ஜெபித்து காத்துக் கொண்டிருக்க வேண்டுமா?

நிச்சயமாக இல்லை! வேதாகமத்தை ஆராய்ந்து பார்த்தால் இரண்டு விதமான ஊழிய அழைப்பு உள்ளதை நாம் கவனிக்க முடியும்.

**1. பொதுவான அழைப்பு** (General Calling)
**2. தனிப்பட்ட அழைப்பு** (Specific Calling)

**பொதுவான அழைப்பு** (General Calling)

அருட்பணி/ஊழியம் முழுநேர ஊழியர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அது, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவருக்கும் சொந்தமானது. மாற்கு 16:15 இவ்வாறு சொல்கிறது, "நீங்கள் உலகமெங்கும்போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." அதே போல், மத்தேயு 28:19லும் "நீங்கள் புறப்பட்டுப் போய் " என்று வருகிறது.

இங்கு ‘‘நீங்கள்’’ என்பது சீடர்களைக் குறிக்கும். அந்த சம்பவத்தில் வரும் சீடர்களுக்கு மட்டுமல்ல, இயேசுவின் சீடர்களாக இருக்கும் நம் அனைவருக்கும் பொருந்தும்.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு சீடராக அழைக்கப்படுகிறார். இயேசுவை தனது வாழ்க்கையின் குருவாக/ வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு அவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரது போதனைகளின்படி வாழ்பவர்கள்தான் சீடர்கள்.

ஒருவேளை, நீங்களும் அவ்வாறு இயேசுவைப் பின்பற்றுகிறீர்கள் என்றால், நீங்களும் சீடர்கள்தான். நீங்களும் சீடர்கள் என்றால் இயேசுவின் அந்த பிரதான கட்டளை (Great Commission) உங்களுக்கும் பொருந்தும்.

மேலும், அந்த இரண்டு வசனங்களில் ‘‘புறப்பட்டுபோய்’’ (Go), ‘‘உலகமெங்கும் போய்’’ என்ற வார்த்தைகளை கவனிக்க வேண்டும். அதாவது ஏற்கெனவே இயேசு நம்மை ஊழியம் செய்ய புறப்பட்டு போகச்சொல்லிவிட்டார்.

ஆகையால், அவர் 'Go' என்று கூறிய பிறகும் எனக்கு ஊழிய அழைப்பு வரும்வரை நான் காத்திருக்கிறேன் என்று சொல்வது ஏற்புடையது அல்ல. அழைப்பை இயேசு ஏற்கெனவே கொடுத்துவிட்டார், நாம்தான் பலவிதமான காரணங்களை சொல்லியும், விருப்பமில்லாமல் இருப்பதாலும் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறோம்.

**2.தனிப்பட்ட அழைப்பு** (Specific Calling)

சரி, இயேசு நம்மைப் போகச் சொல்லிவிட்டார், ஆனால், எங்கு செல்வது? எப்போது செல்வது? எப்படி செல்வது? என்பதுதான் தனிப்பட்ட அழைப்பு.

அதாவது, தேவன் தனிப்பட்ட முறையில் உங்களை வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு, தேவனுடைய சித்தத்தின்படி நற்செய்தியைக் கொண்டு சேர்ப்பது. இதைத்தான் நாம் ஜெபித்து வேதாகமத்தின் மூலம் உறுதி செய்ய வேண்டும்.

எ.கா: நெகேமியா, ராஜாவுக்கு பானபாத்திரக்காரர் (Cup bearer) மற்றும் கவர்னராக இருந்தவர் (Governor of Judah), ஆனால், அரசாங்கத்தின் இந்த உயர்ந்த பொறுப்பில் இருந்துகொண்டே இடிக்கப்பட்ட எருசலேமின் அலங்கத்தை கட்ட ஆண்டவரால் அருட்பணியாளராக/ ஊழியராக பயன் படுத்தப்பட்டார். இது நெகேமியாவின் தனிப்பட்ட அழைப்பு.

அதேபோல், எத்தியோப்பியா நாட்டின் ஒரு மந்திரிக்கு நற்செய்தி சொல்ல பிலிப்பு என்பவரை ஆவியானவர் ஏவி, அந்த மந்திரி செல்லும் இரதத்திற்கு அனுப்பினார், இது பிலிப்புவின் தனிப்பட்ட அழைப்பு.

இவ்வாறு, வேதாகமத்தில் ஆண்டவரின் இருதயத்தைப் புரிந்துகொண்ட அனைவரும் ஊழியம் செய்தார்கள், ஆனால், வெவ்வேறு விதத்தில் தனிப்பட்ட முறையில் ஆண்டவர் அழைத்ததின் அடிப்படையில் ஊழியம் செய்தார்கள்.

ஊழியம் எல்லோரும் செய்ய வேண்டும் என்பது பொதுவான அழைப்பு. ஆனால், எங்கு செல்ல வேண்டும்?, யார் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டும்?, எப்படி செய்ய வேண்டும்? என்பதைக் குறித்து ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் தனிப்பட்ட முறையில் அழைப்பைக் கொடுப்பார்.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள், ஒருவேளை பள்ளி அல்லது கல்லூரி மாணவர்களாக இருக்கலாம். இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரமும் யாரோ ஒரு மாணவர் தற்கொலை செய்துகொள்கிறார். ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது 4% அதிகரித்துகொண்டே வருகிறது.

குறிப்பாக, கடந்த 10 வருடத்தில் பெண் பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்வது 61% அதிகரித்துள்ளது என்று ஆய்வுகள் சொல்கின்றன.

நீங்கள் படிக்கும் பள்ளி/ கல்லூரி வளாகத்திற்குள் ஆண்டவர் உங்களை ஊழியராக அனுப்பியிருக்கிறார். இப்படிப்பட்ட தற்கொலை எண்ணங்களோடும், மனதில் காயங்களோடும், வெளியே சொல்ல முடியாத வேதனைகளோடும், யாராவது என் பிரச்சனைக்கான தீர்வைக் கொடுக்க மாட்டார்களா என்ற ஏக்கத்தோடும் காத்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு நீங்கள் சொல்லாவிட்டால் யார் இயேசுவை சொல்வார்கள்?

கண்முன்னால் சீரழிந்து போகும் வாலிபர்களைப் பார்க்கும்போது பாரம் வரவில்லையா? ஒருவேளை நீங்கள் வேலைப் பார்த்துக்கொண்டிருக்கலாம், வேலை செய்யும் அந்த இடத்தில் ஆண்டவர் உங்களை ஊழியராக அனுப்பியிருக்கிறார். நீங்கள் வசிக்கும் கிராமத்தில்/நகரத்தில் உங்களை ஊழியராக அனுப்பியிருக்கிறார்.

ஆகையால், தேவன் உங்களை வழிநடத்துகிற மக்கள் கூட்டங்களுக்கு தேவனுடைய சித்தத்தின்படி நற்செய்தியைக் கொண்டு செல்லுங்கள். **உங்களது தனிப்பட்ட அழைப்பை ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் வரைக்கும் காத்திருக்க வேண்டாம்.**

பொதுவான அழைப்பின் அடிப்படையில், நீங்கள் இருக்கும் இடத்தில் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்து, அவருடைய நற்செய்தியை அறிவிக்க உங்களை அருட்பணியாளராக அழைக்கிறார்.

**“ஆண்டவரே என்னை பயன்படுத்தும், தேவையுள்ள மக்கள் மத்தியில் என்னை அனுப்பும் என்று அர்ப்பணித்து செயல்பட ஆரம்பிப்போம்!”**

## 2025 ஆகஸ்ட் மாத வேத வினா – விடை போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்களைப் பாராட்டுகிறோம்.

**மதுரை**
ஆசீர்வாதம்
ஷீலா சுரேஷ்
ஹேமலதா வில்சன்
ஞானசிரோன்மணி
சம்பு ஜெயச்சந்திரன்
ஆண்ட்ரூஸ்
குளோரி மல்லிகா
பிலோ சாமுவேல்
ராஜ்குமார்
அருள்மொழி ஜான்சன்
ஜான்சி காமராஜ்
கலா செல்வகுமாரி
சுசீலா ஆபிரகாம்
பங்கஜம் மார்த்தாண்டம்
வினோதினி
தெல்மா ஸ்டான்லி
ரஜினி பியூலா ஷோபிகா
ராணி ஸ்டான்லி பால்
ஜெர்லி இம்மானுவேல்
ரத்னபாய் ஜேசுதாசன்
ஜெமி ஸ்டீபன்

**கன்னியாகுமரி**
தேவசகாயம்
தேவகிருபை
செல்வராஜ்
பிரேமா ஜெரால்டு
பமீலா எட்வின்
லில்லி புஷ்பம்
பியூலா ஜான்சன்
மோகன் சி கமலம்
எப்சிபா நசல்
ரோஹிணி ஜேசன்
ஜெபஜோதிபாய்
டேவிட் மனோகர்
அமுதா ரேச்சல்
அருளப்பன்
டெய்ஸி டேவிட்
ரெத்னா ராஜ்குமார்
பிராகிரன்ஸ் தங்கராஜ்
லலிதா ஜாஸ்பர்

**திருநெல்வேலி**
ரூபி செல்வராணி
வசந்தா பாலசேகரன்
லதா
ஹெலன் ரோஸ் ஜீவன்தாஸ்
ஞானசுந்தரி நாகராஜன்
நூர்ஜி
சந்திரபோஸ்
ஜாஸ்மின் சாம்சன்
அன்பு சுதந்திரம்
பத்மா ராஜையா
மார்கிரெட் பியூலா
கஸ்தூரி எலியாஸ்
ரூத் ஜெயராணி அன்புராஜ்
ரூத் கமலம்
ஜெயசிங்
வில்லியம் பிரெடெரிக்
விஜயவல்லி ஜான்
ரோஸலின் ஜோசப்
செல்வராஜ்
பொன்னுத்தாய் செல்வராஜ்
கிளாடிஸ் ராஜையா
ரஜுலா செல்வின்
ஜெபா நியூட்டன்
ஜெபசித்ரா அருள்குமார்
ஜான்சி சந்தியா
பாக்கியம்
ஜேன் தர்மராஜ்
சந்திரலீலா திரவியம்
ஜெபகுட்டி மோசஸ்
பிரின்சஸ் சுரேந்திரநாத்
ரெஜினா ஸ்டீபன்
செல்வி பொன்னரசி
சாந்தி ராஜன்
சந்திரா தாமஸ்
பெட்ரிசியா ஜஸ்டஸ்
ஜாஸ்மின் டெல்பியா
ஜெனிபர் சில்வியா
ஹெலன் ஸ்வீட்
அன்பு டேனியல்

**தென்காசி**
சுந்தரி ஸ்டீபன்

**தூத்துக்குடி**
ஞானமணி எப்சிபா
ஸ்டான்லி ராஜாமணி
ஆனி இன்பநாயகம்
ரெத்னாம்பாள் ஈஸ்டர்ராஜ்
அன்பு
ஜோதிமணி வில்சன்
லீலா டேவிட்சன்
செல்லமணி ஆல்பர்ட்
சுகிர்தவல்லி பொன்னுசாமி
அன்னத்தாய் ஆல்பர்ட்
கிருபாசனம் ரெமீஜியஸ்
குளோரி செல்வராஜ்
சாலமோன்
தேவமணி ஆபிரகாம்
ஆலீஸ் குணசீலி
ரெத்னாவதி முத்துராஜ்
ஹெலன் திலக்
அசோக்குமார் பிரின்ஸ்
ரூபவல்யா
ஆல்வின்
மனோகரம் ஜான்சன்
பாக்கியராஜ்
சந்திரா
ரேச்சல் தவமணி
பாக்கியராஜ்
சந்திரா
ரேச்சல் தவமணி
ஜான் பிரின்ஸ்
புஷ்பராணி ஜேம்ஸ்
எஸ்தர்
சுதா டேவிட்
தியாகராஜன்
ஆதிசிரோன்மணி ஞானதீபம்

**சென்னை**
ஜெயமேரி சந்திரசேகரன்
கனகா வேணுகோபால்
சைமன் கலைச்சந்திரன்
சாந்தி டென்னிசன்
ஷீலா சேகர்
ஹெப்சிபா தாமஸ்
மடோனா
துரைராஜ்
செலின் ராணி டேவிட்
ஜோன் தேவநாயகம்
யூனிஸ் ரிச்சர்ட்
டேவிட் ஜெயகுமார்
கிரேஸ் தங்கத்துரை
டோரிஸ் பிலோமினா
கரோலின் ராஜகுமாரி

**செங்கல்பட்டு**
ஜரீன் லீனா

**திருச்சி**
டிக்ஸி ஆல்பர்ட்
ஒய்ஸ்லைட் துரைராஜ்
சூசன்னா
டேவிட்
திலீப்குமார்
சிசிலி ஜெயபிரகாஷ்
ஜெபமணி டேவிட்
பேபி சுசீலாபாய்
லில்லியன் ஜோசப்
ராணி

**கோயம்புத்தூர்**
அருணோதயம்
ஜான்சி
அன்பு கமலம்
ரூபன் துரைராஜ் சாந்தி
சின்னக்கண்ணு தனபால்
வசந்த மல்லிகா

**தேனி**
பொன்ராணி அன்புநாதன்
எலிசபெத் பால்ராஜ்
நேசமணி சாமுவேல்
மாலா வில்சன்
ரூபி செல்வராணி
சுசீலா ஜான்

**புதுக்கோட்டை**
சாந்தி வில்லியம்

**தஞ்சாவூர்**
குணசீலி ஸ்டீபன்
ரோஸ்லின் செல்வராணி
பிரமீளா செல்வம்
மல்லிகா ஞானபாய்
ஜோசப்பின் செல்லத்தாய்
சாந்தி குணசேகரன்
ராணி பாண்டியன்

**சிவகெங்கை**
பாலின் மார்டின்
லலிதா பெவின்சன்

**ஈரோடு**
சரோஜினி துரைராஜ்
ஜெயகுமாரி
ரூத் நேசமணி

**பெங்களூரு**
டாரத்தி சாந்தகுமாரி
சில்வியா ராஜகுமாரி
லதா கிரேஸ்
சூர்யா ரிச்சர்ட்சன்
பால்ராஜ்

**நீலகிரி**
நிர்மலா ராஜன்
சோபியா நரேந்திரன்

**சேலம்**
ரோலண்ட் அருள்ராஜ்
பழனியம்மாள் சாமிநாதன்
குளோரி ஸ்டீபன்
இவாஞ்சலின் ஜோன்ஸ்

**பாண்டிச்சேரி**
பியூலா ஜெசுராஜன்

**திருப்பூர்**
கனகசத்தியவதி
தேவி ராஜாசிங்

**விருதுநகர்**
பிளாரன்ஸ் ராஜமோகன்
பொன்னுத்தாய் ராஜேந்திரன்
லீலாவதி பால்சிங்

**வேலூர்**
மெர்ஸி புளோரா
ஸ்ரீகர் மோசஸ்

**கள்ளக்குறிச்சி**
வசந்தா செல்வராஜ்

**திண்டுக்கல்**
பால்சின்னத்தம்பி
அகஸ்ட் ராபர்ட்

**பெரம்பலூர்**
தன்யா
சுகுந்தகுமாரி

**மும்பை**
லீலா ஏர்னஸ்ட்

# வேத வினாக்கள் செப்டம்பர் - 2025

(அப்போஸ்தலர் நடபடிகள்: 1 முதல் 7 அதிகாரங்கள் வரை)

**பொருத்துக**

1. ஒலிவமலை – மெசொப்பொத்தாமியா
2. யுஸ்து – நம்பிக்கை
3. பொந்து – எருசலேம்
4. மாமிசம் – பிரிகியா
5. காரானூர் – பர்சபா

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. ..... உங்களிடத்தில் வரும்போது நீங்கள் ..... ..... யூதேயா முழுவதிலும் ..... கடைசி பரியந்தமும் எனக்கு .....
2. அல்லாமலும் ..... வானத்திலே ..... தாழ ..... ..... ..... புகைக்காடாகிய ..... காட்டுவேன்.
3. ..... எனக்கு ..... பூமி எனக்குப் .....
4. அப்போஸ்தலருடைய ..... அநேக ..... ..... ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது.
5. ..... திரளான கூட்டத்தார் ஒரே ..... ஒரே ..... வர்களாயிருந்தார்கள்.

**விடை எழுதுக**

1. பாடுபட்டபின் எத்தனை நாள் அப்போஸ்தலருக்கு தரிசனமானார்?
2. யூதாஸ் ஒரு நிலத்தை எவ்வாறு சம்பாதித்தான்?
3. விசுவாசிகள் எவற்றில் உறுதியாய் தரித்திருந்தார்கள்?
4. மோசே எவ்வளவு காலம் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்?
5. ஸ்தேவான் எப்படிப்பட்டவனாயிருந்தான்?

**தொகுப்பு:** Mrs. **மெர்ஸி கிறிஸ்டோபர்,** *சென்னை.*

- விடைகளுடன், வேத ஆதாரங்களையும் எழுதுங்கள்.
- விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதக்கூடாது.
- வினா எண்ணைக் குறிப்பிட்டு, பதில்களை மட்டும் எழுதுங்கள்.
- வளரும் விண்ணரசு இதழின் சந்தா எண் மற்றும் அலைபேசி எண்ணுடன், உங்கள் **முழு முகவரியையும்** எழுதுங்கள்.
- சரியான விடை எழுதியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**வேதவினா–விடை,**
**வளரும் விண்ணரசு,**
**58/1, முத்தாலம்மன் கோவில் தெரு,**
**சேலையூர், சென்னை – 600 073.**
**9003916480**

**உங்களது விடைகள் எங்களுக்கு வந்துசேர கடைசி நாள் இம்மாதம் 20ஆம் தேதி**

**ஆகஸ்ட் மாத வேதவினா–விடை போட்டியில் பரிசு பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்!**

1. திருமதி. **ஞானமணி எப்சிபா** – **தூத்துக்குடி**
2. திரு. **ஆசீர்வாதம்** – **மதுரை**
3. செல்வி. **தன்யா** – **பெரம்பலூர்**

# நடப்புச் செய்திகள்

**புதுடெல்லி:** அணுசக்திப் பொருட்களை தவறாக பயன்படுத்துவதற்கான வாய்ப்பு, கதிர்வீச்சு மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகள் காரணமாக யுரேனியம் தாதுக்களை வெட்டியெடுத்தல், இறக்குமதி செய்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் மத்திய அரசு தனியாரை அனுமதிக்கவில்லை. இந்நிலையில் 2047-ம் ஆண்டுக்குள் நாட்டின் அணுமின் உற்பத்தி திறனை 12 மடங்கு அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. எனவே அணுசக்தி துறையில் அரசின் ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இத்துறையில் தனியாரையும் அனுமதிப்பது குறித்து அரசு திட்டமிட்டுள்ளது. என்றாலும் உலகளாவிய நடைமுறைகளைப் பின்பற்றி பயன் படுத்தப்பட்ட யுரேனியம் எரிபொருளை மறு சுழற்சி செய்தல் மற்றும் புளூட்டோனியம் கழிவுகளை நிர்வகித்தல் ஆகியவற்றில் அரசு தனது பிடியை தக்க வைத்துக் கொள்ளும். இந்தியாவில் 76,000 டன் யுரேனியம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 30 ஆண்டுகளுக்கு தலா 10 ஆயிரம் மெகாவாட் மின்னுற்பத்திக்குப் போதுமானது. என்றாலும் அரசின் இலக்கை எட்டுவதற்கான தேவையில் சுமார் 25% மட்டுமே உள்நாட்டு வளங்களால் பூர்த்தி செய்ய முடியும். எனவே 75% இறக்குமதி செய்யப்பட வேண்டும். மேலும் இந்தியா அதன் பதப்படுத்துதல் திறனை அதிகரிப்பதும் அவசியமாகிறது.

**சென்னை**: சாட்ஜிபிடி-யின் ஏஐ சாட்பாட்டில் பயனர்கள் மேற்கொள்ளும் தனிப்பட்ட சாட்கள் கூகுளில் கசிந்ததாக தகவல் வெளியானது. அது குறித்து விரிவாக பார்ப்போம். கசிந்துள்ள சாட்ஜிபிடி பயனர்களின் உரையாடல்கள் கூகுளில் இடம்பெற்று இருந்தாலும் அதை எப்படி தேடுவது என அறிந்தவர்களுக்கு மட்டுமே கிடைத்தது. இதில் பயனர்கள் மேற்கொண்ட ப்ராம்ப்ட் மற்றும் அதற்கு ஏஐ ஜெனரேட் செய்த பதில்கள் இதில் கிடைக்கப் பெறுவதாக தகவல். **இதற்கு காரணம் என்ன?** - சாட்ஜிபிடி-யில் உள்ள 'ஷேர்' அம்சம்தான் இதற்கு காரணம் என தெரியவந்துள்ளது. இந்த அம்சத்தின் மூலம் பயனர்களின் உரையாடல்கள் லிங்குகளாக ஜெனரேட் ஆவதாக ஃபாஸ்ட் கம்பெனி என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த லிங்குகள் பிரைவேட்டாக இல்லாமல் தேடுபொறிகளில் இடம்பெற்றுள்ளது தான் இந்த சிக்கலுக்கு காரணம். அதன் ஊடாக இப்போது அது கூகுள் உள்ளிட்ட தேடு பொறிகளில் இடம்பெற்றது தெரியவந்தது. chatgpt.com/share என தேடுவதன் மூலம் பயனர்களின் உரையாடல்களை தேடுபொறிகளில் பெற முடிவதாக தகவல் வெளியானது. **ஓபன் ஏஐ சொல்வது என்ன?** - பயனர்களின் சாட்கள் தேடுபொறிகளில் கிடைப்பதாக தகவல் வெளியானதும் 'ஷேர்' அம்சத்தை பயன்பாட்டில் இருந்து நீக்கிவிட்டதாக சாட்ஜிபிடி-யை வடிவமைத்த ஓபன் ஏஐ நிறுவனம் தெரிவித்தது. இதுவொரு குறுகிய கால பரிசோதனை முயற்சி என்று ஓபன் ஏஐ தெரிவித்தது. **சாட்ஜிபிடி?** தொழில்நுட்ப சாதனங்களின் வழியே பயனர்களோடு உரையாடும் தன்மை கொண்ட சாட்பாட் தான் சாட்ஜிபிடி. இதனை ஓப்பன் ஏஐ நிறுவனம் வடிவமைத்துள்ளது. இந்நிறுவனத்தை கடந்த 2015 வாக்கில் எலான் மஸ்க், சாம் ஆல்ட்மேன் மற்றும் சிலர் இணைந்து தொடங்கினர். இது செயற்கை நுண்ணறிவு பெற்ற பிளாட்பார்ம். இதில் பயனர்கள் கேட்கிற கேள்விகள் அனைத்திற்கும் விடை கிடைக்கும்.

கடந்த 2022-ம் ஆண்டின் இறுதியில் ஓபன் ஏஐ நிறுவனம் சாட்-ஜிபிடி ஜெனரேட்டிவ் ஏஐ சாட்பாட்டை பொது பயன்பாட்டுக்கு அறிமுகம் செய்தது. அது டிஜிட்டல் பயனர்கள் மத்தியில் அதீத வரவேற்பைப் பெற்றது. கிட்டத்தட்ட ஜெனரேட்டிவ் ஏஐ பயன்பாடு சார்ந்த புரட்சியை அது ஏற்படுத்தியது. கதையைச் சொல்ல, கட்டுரை படிக்க, பாடல் எழுத என பயனர்கள் கேட்கும் சகல கேள்வி மற்றும் சந்தேகங்களுக்கும் இதில் பதில் கிடைக்கும்.

நன்றி: தி இந்து தமிழ் திசை (18/08/2025)

# ஆலய மறுசீரமைப்புப் பணிக்காக...

## ஒரு ஆலயம் மறுசீரமைக்கப்பட தேவை ரூ.15.00 இலட்சம்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துகள்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷன் மூலமாக கிராமங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் மற்றும் போதகர் வீடுகள் ஆகியவை பல வருடங்களைக் கடந்துவிட்ட காரணத்தினாலும், அப்போது கிடைத்த காணிக்கைகளைக் கொண்டு எளிமையான முறையில் கட்டப்பட்ட காரணத்தினாலும் பழுதடைந்துள்ளன.

ஆகவே, அவற்றை மறுசீரமைக்கும் பணியைச் செய்ய வேண்டியுள்ள கட்டாயத்தில் உள்ளோம்.

தேவனுடைய ஆலயம் கட்டப்படுவதற்கு இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் உதாரத்துவமான காணிக்கைகளைக் கொடுத்ததுபோல, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நீங்களும் தேவ ஆலயம் மறு சீரமைக்கப்பட உதவும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்.

**அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,**
பொதுச்சேவகர்.

### மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய ஆலயங்கள்

உ.புதுக்கோட்டை
மொண்டிக்குண்டு
இந்திரா காலனி
குருணைக்கல்பட்டி
கூத்தியார்குண்டு
தண்டியனேந்தல்

**Account Name : INDIA CHURCH GROWTH MISSION**
**Account Number : 10143136773**
**Bank : State Bank of India**
**Branch Name : Selaiyur, Chennai- 600073**
**IFSC Code : SBIN0007948**

icgm1014@sbi
ICGM

**Registered with RNI Under No:TNTAM/2000/01585**

**Postal Registration No: TN/MA/42/2024-2026 WPP No: TN/WPP-20/SR/2024-2026**

**Posted at BPC Madurai - 625 001.**

**Date of publishing: 28th August 2025** **Date of posting - 28,29 & 30th August 2025.**

**Printed by Mr.S.Gunasekaran and Published by Mr.D. Thirugnanam on behalf of Irai Arasu Trust and printed at Sharon Print System, No:51/71, Ahimsapuram First Street, Near Saraswathi Theatre, Sellur, Madurai-625002 and Published at Nagamalai Pudur, Palkalai Nagar, Madurai-625021, Editor Mr.G. Ponnuraj.**

## பொதுச்சேவகரிடமிருந்து... தொடர்ச்சி...

ஆண்டவர் உங்களை ஏவினால், ஒரு ஆதிவாசிப் பெண் குழந்தை விடுதியில் தங்கிப் படிக்க ரூ.1500/- கொடுத்துத் தாங்கும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

ஆகஸ்ட் 31 ஆம் தேதி டெல்லியில் உள்ள விக்டரி சர்ச் ஆப் இந்தியா (Victory Church of India) சபையில் தேவ செய்தியைப் பகிர்ந்து கொள்ள தேவன் உதவினார். அதன் பொறுப்பாளர் திரு.ஜெபராஜ் அவர்கள் நமது ஆதரவாளராகவும் இருந்து வருகிறார். அவருக்கு இயக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்தீஷ்கர் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் முடிவடைந்து, தேவநாம மகிமைக்கென்று அவ்வாலயங்கள் அர்ப்பணிப்பு செய்யப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.

பின்பக்கத்தில் உள்ள ஆலயங்களின் மராமத்துப் பணிகளுக்காகவும், ஜெபித்து, உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய திருச்சபை வளர்ச்சி மிஷனின் ஊழியங்களை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி வரும் உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் சீடராக்கும் பணியில்,
அருள்திரு.அ. லெஸ்லி நாகராஜன்,
பொதுச்சேவகர்.

**If undelivered, please return to:**

**Valarum Vinnarasu, No.58/1. Muthalamman Koil Street,
Selaiyur, Chennai - 600 073. Tamilnadu.
Cell : 9442150482.**

icgm1014@sbi

ICGM

**To:**